தீபகச் சுடர்
மே 2026
தீபம் 14 சுடர் 12
தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

# மே மாதம் – மரியன்னை மாதம்:

## கிறிஸ்துவை நோக்கி வழி நடத்தும் ஒளி.



# தீபகத்திலிருந்து **இறையாசீர்**



அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,

## “மே மாதம் : மரியன்னை மாதம்” கிறிஸ்துவை நோக்கி வழிநடத்தும் ஒளி!

மே மாதம் உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்களின் இதயங்களில் சிறப்பு பெற்ற மாதமாகும். இது இயேசுவின் தாய் தூய கன்னி மரியாளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட புனிதமான காலம். மலர்கள் மலரும் இந்நேரத்தில், அன்பு, பக்தி, நன்றியுடன் மரியன்னையை மகிழ்விக்க நாமெல்லாம் அழைக்கப்படுகிறோம். மரியன்னை ஒரு வரலாற்று நபராக மட்டுமல்ல உயிரோடு நம்முடன் வாழ்ந்துவரும் தாய். சிலுவையின் அடியில் இயேசு, “இதோ உன் தாய்” (யோவான் 19:27) என்று கூறி அவரை நமக்கு தாயாகக் கொடுத்தார். அந்த நிமிடத்திலிருந்து, மரியாள் நம்மை தனது மகனான இயேசுவிடம் அழைத்துச் செல்கிறார். கானாவூர் திருமணத்தில் மரியன்னை சொன்னதுபோல், “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” (யோவான் 2:5) என்று நம்மை வழிநடத்துகிறார்.

இன்றைய அவசரமான உலகில், மரியன்னை பக்தி நமக்கு அமைதி, ஜெபம், மனமாறுதல் மற்றும் இறைவனுக்கு ஒப்புக்கொடுத்த வாழ்க்கையை கற்றுத்தருகிறது. இறைவார்த்தையை இதயத்தில் தாங்கி வாழ்ந்த மரியாள், தாழ்மையும் நம்பிக்கையும் கொண்ட வாழ்வின் முன்மாதிரி. மரியன்னை இருக்குமிடங்களில் அமைதி நிலைக்கும், அவரை வரவேற்கும் இதயங்களில் கிறிஸ்து ஆட்சி செய்கிறார். திருஅவை நமக்கு நினைவூட்டுவது: மரியன்னை பக்தி எப்போதும் திருப்பலி மற்றும் திருவழிபாட்டிற்கு வழி நடத்த வேண்டும். உண்மையான மரியன்னை அன்பு, இயேசுவின் அன்பாக மாற வேண்டும்.

ஆகவே, இந்த மாதத்தில் செபமாலை, நவநாள் ஜெபம், மரியன்னைப் பாடல்கள் ஆகியவை நம்மை திருப்பலியில் ஆழமாக ஈடுபடுத்தட்டும். குடும்பங்கள், பள்ளிகள், ஆலயங்கள் இம்மாதத்தில் அழகிய மரபுகளை மீண்டும் உயிர்ப்பிக்கட்டும்: மே மாத முடிசூட்டல், குடும்ப செபமாலை, மரியன்னைப் பாடல்கள், இறைவார்த்தையை தியானித்தல், இரக்கச் செயல்கள், நமது தினசரி அர்ப்பணிப்பாகட்டும்.

சிறுவர்கள் "அம்மா மரியா"வை அன்புடன் அணுகட்டும். இளைஞர்கள் தூய்மை, துணிவு, சீடத்துவம் ஆகியவற்றின் முன்மாதிரியை அவரில் காணட்டும். இந்த மே மாதத்தில், உங்கள் குடும்பங்களையும் வாழ்க்கையையும் மரியன்னையின் பாதுகாப்புக்குள் ஒப்படைக்க தீபகம் அழைக்கிறது. பயம், நோய், துன்பம் எதுவாக இருந்தாலும் அன்னை மரியாவை நாடுங்கள். ஏனெனில், தாயன்புடன் அவர் எப்போதும் நமக்காக மன்றாடிக் கொண்டிருப்பவர் அன்னை மரியா.

> ஏனெனில்,
> தாயன்புடன் அவர்
> எப்போதும் நமக்காக
> மன்றாடிக்
> கொண்டிருப்பவர்
> அன்னை மரியா!

நற்செய்தியின் நட்சத்திரமான மரியன்னை, குடும்பங்கள் அனைத்தையும் ஆசீர்வதிப்பாராக. இளைஞர்களை உறுதிப்படுத்துவாராக, துன்புறுவோருக்கு ஆறுதல் அளிப்பாராக. நம் அனைவரையும் இயேசுவிடம் நடத்துவாராக.

அன்னை மரியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.05.2026 | தொழிலாளர் புனித யோசேப்பு விழா-திருப்பலி | 06 |
| 02.05.2026 | புனித அத்தனாசியார் - திருப்பலி | 08 |
| 03.05.2026 | பாஸ்கா காலத்தின் 5ம் ஞாயிறு - திருப்பலி | 09 |
| 06.05.2026 | புனித தோமினிக் சாவியோ விழா - திருப்பலி | 10 |
| 10.05.2026 | பாஸ்கா காலத்தின் 6ம் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 13.05.2026 | புனித மரிய மசரெல்லோ - திருப்பலி | 13 |
| 14.05.2026 | புனித மத்தியா திருத்தூதர் விழா-திருப்பலி | 15 |
| 17.05.2026 | ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா- திருப்பலி | 16 |
| 18.05.2026 | புனித லெயனார்து முரியால்தோ - திருப்பலி | 17 |
| 18.05.2026 | புனித முதலாம் யோவான் - திருப்பலி | 19 |
| 24.05.2026 | பெந்தக்கோஸ்து பெருவிழா - திருப்பலி | 20 |
| 25.05.2026 | திருஅவையின் தாய் அன்னை மரியா-திருப்பலி | 22 |
| 26.05.2025 | புனித பிலிப்பு நேரி - திருப்பலி | 23 |
| 29.05.2026 | அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி - திருப்பலி | 24 |
| 31.05.2026 | தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா - திருப்பலி | 26 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| புனித தோமினிக் சாவியோ - வாழ்க்கை வரலாறு | 29 |
| புனித மரிய தோமினிக்கா மசரெல்லோ வாழ்வு தரும் பாடம் | 32 |
| தொன் போஸ்கோவின் வாழ்வில் கிறிஸ்தவர்களின் சகாய அன்னை | 35 |
| திருஅவைச் செய்திகள் | 37 |

பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# தொழிலாளர் புனித யோசேப்பு விழா

திருப்பலி
01.05.2026

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

புத்தொலி வீசி நித்தரைக் கலைக்கும் உத்தமர் இயேசுவின் உடன் பிறப்புக்களான எம் சகோதர, சகோதரிகளே, நமது தாயாம் திருஅவை இன்று தொழிலாளரின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் விழாவைக் கொண்டாட நம்மை அழைக்கின்றது. உழைப்பின் சிகரமாம் தச்சர் சூசையப்பரின் பக்தி முயற்சி 9ஆம் நூற்றாண்டிலிருந்து மேல்திசை நாடுகளின் பல திருநாள் பட்டியலின்படி கொண்டாடப்பட்டு வருகின்றது. 15ஆம் நூற்றாண்டில் அதிகமாய் வளர்ந்தது. திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் சூசையப்பரை "திருஅவையின் பாதுகாவலர்" என டிசம்பர் 8,1870ஆம் ஆண்டில் பிரகடணப்படுத்தினார். திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் 1889ல் சூசையப்பரிடம் செபிக்க அனுமதி வழங்கினார். 12ம் பத்திநாதர் 1955ம் ஆண்டு "தொழிலாளரின் பாதுகாவலர் புனித சூசையப்பர்" என திருப்பலியில் சேர்த்தார். இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் மூன்று நற்கருணை மன்றாட்டில் இணைத்தார்.

ஜனவரி மாதம் 16ம் நாள், 2015ஆம் ஆண்டு, பிலிப்பைன்சில் திருத்தந்தை பிரான்சிஸ் அறிமுகம் செய்த உறக்கத்தில் இறை திருவுளம் உணரும் புனித சூசையப்பரின் பக்தி முயற்சியை அறிவித்தார். இந்த பக்தி முயற்சிப்பற்றி நம் திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு சொல்கிறார். என்னுடைய மேசையில் உறங்கும் நிலையில் உள்ள சூசையப்பரின் சுரூபத்தை வைத்திருக்கிறேன். உறங்கும் நிலையிலும் திருஅவையை அவர் கண்காணிக்கிறார். ஆம், அவரால் அதைச் செய்ய முடியும் என்பது நமக்குத் தெரியும். எப்பொழுதெல்லாம் எனக்குப் பிரச்சனைகள், துன்பங்கள் வருகின்றதோ, அப்பொழுதெல்லாம் ஒரு சிறிய துண்டு தாளில் அவற்றை எழுதி அவருடைய தலைமாட்டில் வைத்துவிடுவேன். அவரும் அதைக்குறித்து கனவு கண்டு, பிரச்சனைக்குத் தீர்வு கொடுப்பார் என்கிறார்.

நாமும் உறங்கும் நிலையிலுள்ள புனித சூசையப்பரின் துணையை நாடினால் நம் பிரச்சனைகளுக்குத் தீர்வும், துன்பங்களிலிருந்து விடுதலையும் கிடைக்கும் என்று உறுதியாக நம்புவோம். நாம் செய்யும் வேலையினால் மற்றவர்கள் நம்மை இகழ்ந்தாலும், அதை நாம் இறைவன் தந்த கொடையாக நினைத்து மற்றவர்களுக்கு நன்மை செய்ய நினைக்கவும், நன்மை செய்யவும் வேண்டும் என்ற உயர்ந்த உள்ளத்தில் நேர்மையாளராக வாழ்ந்தார்.

அதனால் தொழிலாளர்களுக்கெல்லாம் ஒரு சிறந்த முன்னோடியாகவும், பாதுகாப்பாளராகவும், பரிந்து பேசுபவராகவும், எல்லாவற்றுக்கும் மேலாக உலக மீட்பர் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகவும் கன்னிமரியாவின் கன்னியமிக்க கணவராகவும் ஒரு சாதாரண மனிதனாக, தந்தையாம் கடவுளின்

திருவுளத்திற்குக் கீழ்ப்படிந்து, ஒரு நீதிமானாகவும் வாழ்ந்து திருஅவையின் முழு முதல் பாதுகாவலரானார். புனித சூசையப்பர் வழியாக அனைத்துத் தொழிலாளர்களையும், சிறப்பாக குடும்பத் தலைவர்களையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நீதியின் அரசே இறைவா, நீதிநெறியோடு, நேர்மையின் இலக்கணமாக வாழ்ந்து காட்டிய புனித சூசையப்பரைப்போல் இன்று நமக்காக ஆன்மீகப்பணியாற்றிக் கொண்டிருக்கும் தலைமை ஆயர் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர்கள் ஆகியோரின் வழிகாட்டலில், உயிர்த்த இயேசுவின்மீது நம்பிக்கை சாட்சிய வாழ்வில், உறுதியான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ள பொதுநிலையினர் அனைவரும் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்தவர்களாக வாழ வேண்டுமென்று, உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிநடத்தும் தெய்வமே எம் இறைவா, தியாகத்தின் செம்மலாகிய புனித சூசையப்பரின் பரிந்துரையால் உலகத்தலைவர்கள், இனம், மதபேதமின்றி மக்களை அடிமைப்படுத்தாமல், நாட்டையும், மக்களையும் மேம்படுத்தும் எண்ணம் கொண்டவர்களாக வாழ்வதற்கு மனிதநேயம், மனித மாண்பு, மானிட உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் சமூக நீதிப்பாதையில் வழிநடத்திச் செல்வதற்கான வரமருள வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. உயிர்ப்பின் நாயகனே எம் இறைவா, நல்ல குடும்பத் தலைவராக திகழ்ந்த தூய சூசையப்பரின் பரிந்துரை வழியாக இன்றைய இக்கட்டான சூழ்நிலையில், குடும்பங்களிலுள்ள பிளவுகள், மனவருத்தங்கள், பிரிவினைகள் இவைகளை நீக்கி, அன்பு, பாசம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகியவைகளைக் கொண்டு தூய வாழ்க்கை வாழ்வதற்கு எங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து உயிர்த்தெழுந்து வாழ உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆறுதலிக்கும் ஆண்டவரே, பொறுமையின் நாயகன் தூய சூசையப்பரின் பரிந்துரை வழியாக, போர் மற்றும் தீவிரவாதத்தால் துன்புறும் எம் சகோதர சகோதரிகளுக்கு ஆசியளித்து அரவணைத்தருளும். மேலும் நலிந்தவர்கள், அனாதைகள், விதவைகள், அடிமைகள், சமூகத்தால் ஓரங்கட்டப்பட்டவர்கள், மருத்துவரால் கைவிடப்பட்ட நோயாளிகள், ஆகியோருக்கு நீரே ஆறுதலளித்து தங்கள் வாழ்வில் இழந்த மகிழ்ச்சியை உம்மில் நிறைவாய் பெற்றுக்கொள்ள அருள்புரிய வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

# புனித அத்தனாசியார்

திருப்பலி
02.05.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்று நாம் புனித அத்தனாசியஸ் என்னும் மிக சிறப்பு வாய்ந்த புனிதரை சிறப்பிக்கின்றோம். கி.பி. 297ல் எகிப்தின் அலெக்சாண்டிரியாவில் ஒரு கம்பீர தாய் கிறிஸ்த பெற்றோருக்கு பிறந்தார். இவரது பெற்றோர் இவரை சிறந்த கல்வியாளராக உருவாக்க எண்ணி பல மேற்படிப்புகளை பெற வைத்தனர். மறைவல்லுநராகவும், இறையியலில் மிகச்சிறந்தவராக திகழ்ந்த இவரை அலெக்சாண்டிரியாவின் ஆயர், புனித அலெக்சாண்டர் தன் உதவியாளராக நியமித்தார். அவரின் மறைவுக்குப் பின் புனித அத்தனாசியுசே அலெக்சாண்டிரியாவின் ஆயரானார். தனது 46ஆம் ஆண்டு கால ஆயர் பதவியின்போது, ஆரியுஸ் என்ற குருவின் ஆரிய பதித கொள்கையை எதிர்த்தார். அதாவது கடவுள் இயேசு கிறிஸ்துவை ஒரு சிறந்த படைப்பாகத்தான் உருவாக்கினார் என்பதாகும். அதை எதிர்த்து ஒரே கடவுள் மூன்று கடவுளாக இருக்கிறார் என்ற உண்மையை உறுதியுடன் நிலைப்படுத்தினார். இதனால் 4 பேரரசர்கள் இவரை பலமுறை நாடுகடத்தி பல துன்பங்களை அடையச் செய்தனர்.

இவர் சேவைபுரிந்த காலத்தில் புனித அந்தோணியாரின் பல அற்புதங்களைக் கண்டு அனுபவித்தார். புனித அந்தோணியாரின் வாழ்க்கை வரலாற்றை இலத்தீன் மொழியில் எழுதியவர். தன்னுடைய 46ஆண்டு கால சேவையில் 17ஆண்டுகள் நாடுகடத்தப்பட்டவர். இவரது சிறப்பு கருதி திருஅவையில் மிக முக்கிய புனிதராக கருதப்பட்டவர் இவரது தெய்வத் தந்தையை கண்டு ஆலயங்களின் தந்தை என்றும் சம்பிரதாயத்தின் தந்தை என்றும் அழைக்கப்பட்டவர். இவரது மரணவேளையில் பல குருக்களும், ஆயரும் புடைசூழ்ந்த நிலையில் இறைவனடி சேர்ந்தவர். தெய்வத்தன்மையில் வாழ்ந்த இவரது மனஉறுதியை மனதில் இருத்தி நாமும் இவரைப்போலவே இறைவனின்மேல் மனஉறுதியை பெற இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல இறைவா, நம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் நமது கத்தோலிக்க பாரம்பரிய கருத்துக்களையும் கொள்கைகளையும் பிறசபைகளுக்கு விட்டு தராமல் இயேசு கிறிஸ்துவின் மதிப்பீடுகளை உயர்த்தி, தாம் பெறாமல் செயலாற்ற, அதன்படி வாழ எமக்கு வேண்டிய அருளைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பின் இறைவா, இயற்கையின் சீற்றத்தால் அதிகரித்துக்கொண்டிருக்கும் வெப்ப சக்தியின் தாக்கத்தை தனித்து அதனால் வரக்கூடிய பலநோய்களையும், உபத்திரங்களையும் தாங்கக்கூடிய உடல்வலிமையையும், வெப்ப சக்தியை குறைக்க நல்ல மழையையும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. மனஉறுதியின் வடிவமே இறைவா, உம்மைப்போன்று துன்பங்களைக் கண்டு துவளாமல், இறைவனின் உண்மை தத்துவத்தை உலகிற்கு உரைத்து, ஆரிய பதித கொள்கையை எதிர்த்து பலமுறை நாடுகடத்தப்பட்டபோதும் மனந்தளராமல் ஒரு சிறந்த மறைவல்லுநராக வாழ்ந்த புனித அத்தனாசியஸ் போன்று மனஉறுதியை பெற்று வாழ எமக்கு வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## பாஸ்கா காலத்தின் 5ம் ஞாயிறு

திருப்பலி
03.05.2025

**முன்னுரை**

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *திப. 6: 1-7* II. *1பேதுரு 2: 4-9* *யோவா. 14: 1-12*

“வழியும் உண்மையும் வாழ்வும் நானே” என்று நல்வாழ்வுக்கு வழிகாட்டும் உண்மையை நமக்கு இயேசு அறிவிப்பதை இன்றைய பாஸ்கா காலம் ஐந்தாம் ஞாயிறு திருப்பலி நமக்கு வெளிப்படுத்துகிறது. திருத்தூதர்களின் முதற்பணி இறைவேண்டலிலும் இறைவார்த்தையை அறிவிப்பதுமாகும். வேறு எந்தப் பணியும் திருத்தூதரின் இந்த இறைப்பணிக்கு இடையூறாக இருக்கக் கூடாது. எனவே பந்தி பரிமாறுவதில் ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்க ஏழு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறும் முதல் வாசகத்தைக் கவனமுடன் கேட்போம். கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நாம். நாம் எவ்வாறு வாழவேண்டுமென்பதற்கு நமதாண்டவர் இயேசுகிறிஸ்து நமக்கொரு எடுத்துக்காட்டு. நாம் அரச குருத்துவ திருக்கூட்டம். கடவுள் தம் மக்களை எகிப்து நாட்டிலிருந்து கூட்டி வந்தாரே, அவ்வாறே நம்மை இங்கிருந்து வானகம் கூட்டிச்செல்வார். இதை நம்புவோருக்கு கிறிஸ்து இயேசுவே அடிக்கல் ஆவார்.

நற்செய்தியில் இயேசு, “நானே வழியும் உண்மையும் வாழ்வும் என்கிறார்.” இறைவன் மனிதனைப் படைத்தது தம்மையறிந்து அன்பு செய்து வாழவும் அதன்மூலம் முடிவில்லாத வாழ்வைப் பெறவும் படைத்தார். ஆனால் மனிதன் இறைவனது உறவை இழந்துவிட்டான். தீயோன் காட்டிய வழியில் சென்று பாவத்தைத் தேடிச்சென்றான். கடவுளது அன்பை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டான். இயேசு நமக்கு வழியாக இருக்கிறார். நம்மை பாவ அழிவின்றி மீட்கும் வழியாகவும் மீண்டும் தந்தையோடு இணைக்கும் வழியாகவும் உள்ளார். நானே வாழ்வு என்கிறார் இயேசு. தம் ஒரே மகன்மீது நம்பிக்கைக்கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள

முடியும் வழி என்று ஒன்று இருந்தால்தான் ஒருவன் அதில் நடக்க முடியும். உண்மை என்று ஒன்று இருந்தால்தான் ஒருவன் அதில் நடக்க முடியும். உண்மை என்று ஒன்று இருந்தால்தான் ஒருவன் அறிய முடியும். இவை மூன்றுமே ஒரே ஒருவரிடம் மட்டுமே உள்ளது. அவர் இயேசு கிறிஸ்து மட்டுமே. நிலைவாழ்வை நோக்கிய வழியில் நடந்து உண்மை என்றும் இயேசுவை கண்டுக்கொள்ள மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வழியும் உண்மையும் வாழ்வும் நானே என்றுரைத்த இறைவா, திருஅவையை வழிநடத்திச் செல்லும் எம் தலைமை ஆயரையும், மற்றுமுள்ள ஆயர்களையும், அருட்பணியாளர்களையும், இறை நம்பிக்கையாளர்களையும் ஆசீர்வதித்து வாழ்வும் வழியுமான நீரே இவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையாய் வாழ அழைப்பவரே எம் இறைவா, எம் நாட்டின் நிலையை அறிபவர் நீரே, எம் நாடாளும் தலைவர்கள், ஆட்சியாளர்கள், நாட்டின் நிலையை அறிந்து, பொருளாதார சரிவிலிருந்து நாட்டை மீட்கவும் மக்களை வரிகளால் சுரண்டாமல் அமைதியான வாழ்வுக்கு வழி அமைக்க நல்லறிவு தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் ஒளியே எம் இறைவா, விடுமுறை காலங்களில் எம் குழந்தைகள் கற்ற மறைக்கல்வியை வாழ்வாக்கிடவும், அதனையே வாழ்வின் வரிச்சட்டமாகக் கொண்டு உம்மேல் நம்பிக்கைகொண்டு வாழ்ந்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4 உம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் பேரன்பை வெளிப்படுத்தியவரே, கோடைமழை பொழிந்து வெப்பம் தனிந்து பருவகால பயிர்கள் விளைச்சல் தந்து வேளாண்மைச் சிறக்கவும், சிறுகுறு தொழில்களுக்கு அரசு உதவிக்கரம் நீட்டவும், குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி பெருகவும், குழந்தைகளுக்கு நல்ல ஞானத்தையும் அறிவையும் தந்து உம்மைப்போன்றவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித தோமினிக் சாவியோ விழா

திருப்பலி
06.05.2025

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

தோமினிக் சாவியோ தன் பெற்றோரைப் போலவே இறைப்பற்று மிகுந்தவராக வளர்ந்தவர். நான்கு வயதிலேயே காலை மாலை, உணவுக்கு முன், பின் கூறப்படும் செபங்கள், மூவேளைச் செபம் முதலியவைகளை நன்கு

கற்றிருந்தார். நற்கருணை அருட்சாதனத்தைப் பற்றிய அனைத்து மறை உண்மைகளையும் கற்றுத் தெளிவுற்றிருந்தார். எனவே விதிமுறைகளைச் சற்றுத் தளர்த்தி அவருக்கு முதல் இறை உணவு வழங்கிட பங்கு தந்தை தீர்மானித்தார். முதல் நற்கருணை பெற்ற அந்நாளில், "நான் அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பயன்படுத்தி ஆன்ம குருவின் உத்தரவின்படி நற்கருணை உட்கொள்வேன். ஞாயிறு மற்றும் கடன் திருநாட்கள் கடமைகளைச் சரியாகச் செய்வேன். இயேசுவும் அன்னை மரியாவும் எனது நண்பர்கள் மற்றும் இறக்க நேரிட்டாலும் பாவத்தைச் செய்யமாட்டேன்" என்று சில தீர்மானங்களை எழுதிவைத்துக் கொண்டு தினமும் வாசித்து வந்தார்.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அந்நாட்களில் படிப்பிலும் சிறந்து விளங்கினார் தோமினிக். 1857 மார்ச் 9ம் நாள் மாலையில் தோமினிக் தமது ஆவியை இறைவனிடம் ஒப்படைத்தார். இத்தாலியில் வாழ்ந்த சார்லஸ் சாவியோ மற்றும் பிரிஜித்தம்மாள் தம்பதியினருக்கு 1842 ஏப்ரல் 2ம் நாள் கியேரி நகருக்கு அருகில் ரீவா என்னும் கிராமத்தில் பிறந்த தோமினிக் சாவியோ, 15 வயதிலேயே புனிதத்தன்மையின் உச்சியை அடைந்த தோமினிக் சாவியோவிற்கு திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1950 மார்ச் 5ம் நாள் அருளாளர் பட்டமும் 1954 ஜூன் 12ம் நாள் புனிதர் பட்டமும் வழங்கினார். இங்ஙனம் புனிதரிடம் பிள்ளைகளும் புனிதமடைய உதவுமாறு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே இறைவா, இளம் புனிதரின் வழியாய் இன்று உம்மை பின்தொடர்ந்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு உமது வழிகாட்டுதலை சிறப்பாக தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. சிறுபிள்ளைகளை என்னிடம் விரவிடுங்கள் என்றவரே, எங்கள் பங்கின் சிறு பிள்ளைகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். எங்கள் இளம் புனிதரை பின்பற்றி நாங்கள் தீய பழக்கவழக்கங்களை விடுத்து நல்வழியில் நடக்க எங்களுக்குத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியரே எம் இறைவா, புனிதரின் உயர்வுக்கு பெரிதும் உதவியாக இருந்தவர்களைப் போல் எங்களின் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பணிபுரிய நல்வழிகாட்டிய அருட்தந்தையர் கிடைக்கப்பெற உம்மை மன்றாடுகிறோம்.

4. குணமளிக்கும் மருத்துவரே, எம் இளம் புனிதர் தனது உடல் நலக்குறைவாலும் உமது பிரசன்னத்தை உணர்ந்து உம்மிடம் மன்றாடினார். எங்களின் உடல்நலத்தை நீரே பாதுகாத்து பூரண குணமளித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பாஸ்கா காலத்தின் 6ம் ஞாயிறு

திருப்பலி
10.05.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *திப. 8: 5-8, 14-17* II. *1பேதுரு 3: 15-18* *யோவா. 14: 15-21*

இறையேசுவின் நாமத்தினால் உங்கள் அனைவரையும் இத்திருப்பலியில் கலந்துக்கொண்டு, இறையாசீரைப்பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கின்றோம். இன்றைய வாசகங்கள் அனைத்தும் மூவொரு கடவுளுடன் நம் உறவினை வலுப்படுத்த அவ்வுறவில் நம்மை இணைத்துக்கொள்ளும் பாதையை காட்டுகிறது. திருமுழுக்கு பெற்ற நாம் ஒவ்வொருவரும் இறைவனோடு இணைந்துவிட்டதாக எண்ணுகிறோம். இயேசுவின் பெயரால் நாம் பெற்ற திருமுழுக்கு நம்மை இறையரசுடன் இணைப்பாளர்களாக மாற்றுகிறது. நாம் இறைவன்மீது கொள்ளும் அன்பு இயேசுவின் கட்டளைகளை கடைப்பிடித்தால் இறைவனின் பிரசன்னத்தை காண இயலும். வானிலிருந்து இறங்கிவரும் மழைநீர் நிலத்தை நனைத்து ஆறாக பெருக்கெடுத்து ஓடி கடலில் சேறுகின்றது. மீண்டும் ஆவியாகி விண்மண்டலத்தில் நீர் துளிகளை சுமந்து மேகமாக வலம்வந்து மழையாக பொழிகின்றது. இச்சுழற்சி ஒன்றோடொன்று உறவுக்கொள்ளும் பொழுது இச்சுழற்சி செழிக்கின்றது. தந்தையை இயேசுவிலும், இயேசுவில் நாமும், நம்மில் இறைவன் இயேசுவும் இணைந்திருந்தாலே அங்கு வளமும் நலமும் செழிக்கும் என்பதை உணர்த்துகிறது. உயிர்த்த இயேசு கிறிஸ்து தம் சீடர்களுக்கு காட்சியருளும் பொழுது நான் உங்களை திக்கற்ற பிள்ளைகளாக விடமாட்டேன் என்று வாக்களிக்கின்றது. ஒரு தந்தை தன் பிள்ளைகளை ஈன்ற பின்னர் அவர்களின் எதிர்காலம் அவர்களின் நலன்களை கருத்தில்கொண்டு உழைத்து செல்வங்களை சேர்த்து தன் பிள்ளைகளின் தேவைகள் என்னவென்பதை திட்டம் தீட்டுகின்றார். அதைப்போன்றே இறைமகன் நம்மிலிருந்து மீட்டு புதுப்பிறப்பினை தந்து, தன் பிள்ளைகளை தனியே விட்டுச்செல்லாமல் தன் பிள்ளைகளுக்கு துணையாளராக தூய ஆவியினை விட்டுச் சென்றார். தான் வரும்வரை அவரின் அரவணைப்பில் வாழ்ந்திட தந்தையிடம் பரிந்துப் பேசுகின்றார். இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் அவர் வரும்வரை தூயஆவி துணையாளராய் காத்திடுவார் என்பதை உணர்ந்தவர்களாக அவரது கட்டளைகளை பின்பற்றி வாழ இத்திருப்பலியில் பக்தியோடு இணைந்து இறையாசீர் பெற்று மகிழ்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அனைத்துலகோரும் கடவுளைப் போற்றி ஆர்ப்பரிக்கவும் அவரின் பெயரினை மாட்சிப்படுத்தவும் கடவுளின் அற்புதச் செயல்களை எங்கும் பறைச்சாற்றவும் உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், கன்னியர்கள் இவர்கள் யாவரும் இறைவனின் பேரன்பிலிருந்து என்றும் விலகாமல் இயேசுவின் சாட்சிகளாக

இறைப்பணியினை செவ்வனே செய்ய தேவையான ஆற்றலையும் அருளையும் அளித்து காத்திட இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பே உருவான எம் இறைவா, உங்களுக்கு துணையாளராக தூய ஆவியானவரை விட்டுச் செல்கிறேன் என்றீரே, இன்று முக்கியமாக கிறிஸ்துவம் பரவியுள்ள நாடுகளில் ஏற்பட்டிருக்கும் போர்ச் சூழல் மற்றும் இனவெறி, மதவெறி, நிறவெறி போன்ற கொடுமைகள் அரங்கேறி வருகின்றது. அன்பு, மனித நேயம் ஒவ்வொரு மனித உள்ளங்களிலும் மலரவும், அமைதி சகோதரத்துவம் எங்கு நிலவவும் தூய ஆவியானர் ஒவ்வொருவரையும் வழிநடத்த தேவையான ஆசீரை அளித்துக்காத்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. திக்கற்றோருக்கு தஞ்சமான எம் இறைவா, நொருங்கிய நெஞ்சங்களுக்காக மன்றாடுகிறோம். அன்பைத் தேடி அலையும் முதியோர் இல்லங்கள் பாசத்துக்கு ஏங்கித் தவிக்கும் அநாதை இல்லங்கள், அரவணைப்பின்றி சாலையில் அலைந்து திரியும் சுயநினைவற்ற மனநோயாளிகள், செய்யாத தவறுக்காக சிறையில் வாழும் மக்கள், நாட்பட்ட உடல் வியாதிகளில் கஷ்டப்படும் நோயாளிகளின் உணர்வுகளை நீர் அறிந்திருக்கின்றீர் இவர்களுக்கு வேண்டிய அன்பும் ஆறுதலும் அரவணைப்பும் கிடைத்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, இங்கு கூடியிருக்கும் ஒவ்வொருவரையும் தூய ஆவியானவரின் கொடைகளையும் கனிகளையும் பெற்று இறையன்பில் நிலைத்திருக்கவும், எம் பிள்ளைகள் இறைவனின் கட்டளைகளை கடைப்பிடித்து பாவ சிந்தனைகள் அற்று தூய வாழ்வு வாழ எம் பங்கை என்றென்றும் இறைப்பிரசன்னம் சூழ்ந்திருக்கவும் தேர்வு முடிவுகளில் எம் மாணவர்கள் அனைவரும் தேர்ச்சிப் பெற்று அவர்கள் எதிர்ப்பார்க்கும் பள்ளி கல்லூரிகளில் இடம் கிடைக்கவும், இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# புனித மரிய மசரெல்லோ

திருப்பலி
13.05.2026

## முன்னுரை

*திரு. ஜான் சுரேஷ்*

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித மரிய தோமினிக்கா மசரெல்லோ அவர்களின் திருப்பலியில் கலந்துக்கொள்ள வந்திருக்கிறோம். பிறப்பிலிருந்து முதல் 13ஆண்டுகள் தன் பெற்றோருடனும் தன் ஆன்ம இயக்குநர் தந்தை டொமினிக்கோ பெஸ்டாரினோ அவர்களுடனும் இணைந்து இறை நம்பிக்கையில் முதிர்ச்சி பெற பயணித்ததை பார்க்கமுடிகிறது. இரண்டாவது அடுத்த 10 ஆண்டுகளில் கடுமையாக உடல்நல குறைவுகளை சந்தித்தார்.

எனினும் நற்கருணை அருட்சாதனம் பெற்றதுமுதல் பங்குதளத்தில் நற்பணிகளில் பங்குகொண்டார். கற்பு என்னும் புண்ணியத்தை கடைப் பிடித்து, முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்க முடிவெடுத்தார். அமல அன்னை சகோதரிகள் என்ற அமைப்பில் இணைந்து இறை மற்றும் பிறரன்பு பணியாற்றினார். மூன்றாவது பகுதியில் 12 ஆண்டுகளில் இறைவனது திட்டத்திற்கு ஏற்ப தன்னை தயார்ப்படுத்திக் கொண்டார். தொன் போஸ்கோவின் சலேசிய சபைப்பற்றி அறிந்துகொண்டார்.

சலேசிய சபையினர் ஆண்களுக்கான இளையோர் பணி செய்வதுபோல இளம் பெண்களுக்கும் ஒரு தனி சபை உருவாக்கிட தொன்போஸ்கோ முயற்சி மேற்கொண்டிருப்பதை கண்டு மகிழ்ந்தார். சகாய அன்னையின் புதல்வியர் சபையின் துணை நிறுவனரானார். ஆதரவற்ற அனாதை இளம் சிறுமிகள் மற்றும் இளம் பெண்களை பராமரித்தல், கற்பித்தல், மீட்பின் பாதையிலும் தனிமனித ஆளுமை வளர்ச்சியிலும் வழிநடத்துதல் ஆகியவற்றை தம் பணியின் இலக்காக கொண்டு தொன் போஸ்கோவின் வழிகாட்டுதலில் சிறப்பாக செயல்பட்டார். தனது வாழ்நாளின் இறுதி பகுதியாக 9 ஆண்டுகள் தனது சலேசிய சகோதரிகளுக்கு ஆன்மீக உருவாக்கங்களில் தன்னுடைய தாயன்பை சேர்த்து வளர்த்தெடுத்தார். புதிய இல்லங்கள், பல நாடுகளில் சென்று மறைப்பணியாற்றுதல் என சபையை விரிவுபடுத்தினார். மே 14 1881ல் மறைந்தார், அவரது விழா மே 13ல் திருஅவை கொண்டாடுகிறது. புனித மரிய மசரெல்லோவை போன்று நாமும் நம்பிக்கையில் வேறூன்றி வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. ஒளியின் சுடரொளியே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தைக்கு நல்ல உடல் நலத்தைக்கொடுத்தமைக்கு உமக்கு நன்றி கூறுகின்றோம். அவ்வாறே அவரோடு இணைந்து பணிபுரியும் கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து உம் நற்செய்திப் பணியினை சிறப்பாக செய்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று கூறிய இறைவா, இந்த புனித வாரத்தில் இருக்கும் நாங்கள், வெளிவேடக்காரரைப்போல் இல்லாமல், எங்கள் வாழ்வில் இதுநாள்வரையில் செய்த அனைத்து தீமைகளிலிருந்து எங்களை விடுவித்து, உமது உயிர்ப்பில் நாங்கள் புதுவாழ்வு பெற்றவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. தீமை உங்களை நெருங்காது என்று கூறி இறைவா, அனைத்து விதமான பாவகாரியங்களையும் விடாமல் பற்றிக்கொண்டிருக்கும் எங்களை பாவச்சூழலிலிருந்து முற்றிலும் விலகி, உமக்கேற்ற சாட்சிய வாழ்வு வாழ எங்களுக்கு அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

# புனித மத்தியா திருத்தூதர் விழா

திருப்பலி
14.05.2026

## முன்னுரை

திருமதி. ராணிசம்பந்தன்

"புனிதத்தை அடைய இன்றே உன் வாழ்வில் இறுதிநாள் என எண்ணி செயலாற்று" புனித அந்தோணியார். இறையேசுவின் நம்பிக்கையாளர்களுக்கு ஓர் புனித பயண செய்தி மற்றும் எத்தியோப்பியா பகுதிகளில் இறை இயேசுவைப்பற்றி அறிவித்தவர். புனித பேதுரு கூறுவதை கேட்போம். "ஆகையால் ஆண்டவர் இயேசுவிடம் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாய் விளங்க, அவர் நம்மிடையே செயல்பட்ட காலத்தில் நம்மோடு இருந்த ஒருவரைச் சேர்த்துக்கொள்ள நாம் கூடி வரவேண்டியது தேவையாயிற்று. விண்ணேற்றமடைந்த நாள்வரை அவர் ஒருவர் குறிப்பிடுவது இறை இயேசு செய்த ஏனைய செயல்கள் அல்ல, உயிர்த்தெழுதலுக்கு சாட்சி என தெளிவுபட கூறுகின்றார். ஏனைய அற்புத செயல்கள் வெளிப்படையானவை. ஆனால் உயிர்த்தெழுதலோ இரகசியமாக இவர்களுக்கு மட்டுமே தெரிந்ததாக இருந்தது. ஆகவே அனைவரும் கூடி வந்து செபித்தனர். ஏனெனில் இறை இயேசுவோடு வாழ்ந்தவராகவும், உயிர்ப்புக்கு சான்று பகர்பவராகவும் இருத்தல் வேண்டும். அதுமட்டுமல்ல ஒருதலைபட்சமாக அல்ல, இறை திருவுளம் அறிந்து தேர்ந்தெடுப்பதற்காக திருவுளச்சீட்டுப் போட்டு தேர்ந்துக்கொள்கின்றனர்.

யூதாசுக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவர். இவரது இறைப்பணி புனித பயணத்தில் இறை இயேசுவைப்போல் "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" என்பதற்கேற்ப தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர். இறை இயேசுவுக்காக எத்தியோப்பியாவில் சிலுவையில் அறையுண்டு இறந்ததாகவும் எருசலேமிலும் தலை வெட்டப்பட்டு உயிரைத் தியாகம் செய்தார் எனவும் சிலர் கூறுவர். இவர் தையல் தைப்பவர், தச்சர் மற்றும் குடிபோதையிலிருந்து மீண்டவர்களுக்கான பாதுகாவலர். நமது இறைப்பணி பாதை எதை நோக்கியதாக உள்ளது என்பதை சிந்தித்து, புனித பாதையை நோக்கி வாழ வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, புனித மத்தியாசுப்போல இறைப்பணிக்காக தேர்ந்தெடுத்த எம் தாய் திருஅவையின் திருத்தந்தை மற்றும் அனைத்துப் பணியாளர்களையும் நீர் ஆசீர்வதித்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா அனைத்து குடும்பங்களும் திருஅவையில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும், இறையாட்சி எனும் இலட்சியத்தை அடைய, இன்றைய விழா நாயகன் புனித மத்தியாசுவைப்போல எத்தனை இன்னல்கள்,

இடையூறுகள் மத்தியிலும், நற்செய்தி அறிவித்து புனிதத்தை நோக்கிய பயணம் வெற்றிபெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. புனிதரே எம் இறைவா, நற்செய்திக்காக, இறைவனைப் பற்றியும் அவரது செயல்கள் பற்றியும் எத்தனையோ திருத்தந்தையின் மடல்கள், பல எழுத்தாளர்கள் எழுதின புத்தகங்கள், எழுத்தாளர்கள், புதிதாக எழுதும் எழுத்தாளர்கள் அதன் வழியாக வெளிப்படுகின்ற இறை வார்த்தைகள் அனைத்தும் மக்களை சென்றடைந்து ஆசீர்பெறவும் இறையழைத்தல் பெருகவும் அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா

திருப்பலி
17.05.2026

**முன்னுரை**

*திரு. விக்டர்*

I. *திப. 1: 1-11* II. *எபே 1: 17-23* *மத்தேயு 28: 16-20*

இறையேசுவின் பிரியமுள்ள இறைச்சமூகமே, இன்று நாம் இயேசுவின் விண்ணேற்ற பெருவிழாவைச் சிறப்பிக்க நம் திருஅவை நம்மை அழைத்திருக்கிறது. இன்றைய முதல் வாசகமான திருப்பணியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வாசகங்கள் இயேசுவின் இறையாட்சியை வெளிப்படுத்திக் கூறியுள்ளது. இயேசு உயிர்த்த நாற்பது நாட்களிலும் தான் உயிரோடிருப்பதை தம் சீடர்களுக்கு உணர்த்தியிருந்தார். உண்ணும்போதும் அவர்களுடன் இருந்தார். அவர்களோடு உரையாடும்போது திருமுழுக்கு யோவான் தண்ணீரில் திருமுழுக்கு ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள். தூய ஆவி உங்களிடம் வரும்பொழுது கடவுளது வல்லமைப்பெற்று உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்கு சாட்சியாய் இருப்பீர்கள்" என்று கூறி அவர்கள் கண்முன்பாகவே வானகம் சென்றதையும் மேகம் ஒன்று அவரை ஏந்தி சென்றதை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருந்ததை நாம் காண்கிறோம்.

2ம் வாசகமான எபேசியர் எழுதிய திருமுகத்திலிருந்து தூய ஆவியானவர் வழியாக இயேசுகிறிஸ்துவை முழுமையாக அறிந்துக்கொள்ள செய்த தந்தையாகிய கடவுளின் அழைப்பைப் புரிந்து கடவுள் வலிமைமிக்க தம் ஆற்றலை கிறிஸ்துவிடம் செயல்படுத்தி இறந்த அவரை உயிர்த்தெழ செய்து விண்ணுலகில் தம் வலப்பக்கம் அமர்த்தினார், அனைவரையும் கிறிஸ்துவுக்கு அடிபணிய செய்து, அனைத்துக்கும் மேலாக அவரை திருஅவை தலைவராக தந்தருளினார் என்பதும் தெளிவாக அறியப்படுகிறது.

புனித மத்தேயு எழுதிய நற்செய்தியிலும் பதினொரு சீடர்களும் கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்கு சென்று இயேசுவை கண்டபோது விண்ணுலகிலும், மண்ணுலகிலும் எனக்கு எல்லா அதிகாரமும்

தரப்பட்டிருக்கிறது. நீங்கள் சென்று எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தூய ஆவியாரின் பெயரால் திருமுழுக்கு கொடுக்கவும் தன் கட்டளைகளை கடைப்பிடியுங்கள் என்றும் கூறப்படுகிறது. ஆகவே இயேசுவின் விண்ணேற்றத்தை கண்டவர்கள் அவரைப் பின்பற்றியவர்கள் அவரின் கட்டளைகளை நிறைவேற்றியதைப்போல நாமும் இயேசுவின் விடுதலையை, விளைநிலை மக்களுக்கு எடுத்து செல்வோம். நற்செய்தியை அறிவிப்போம். திருஅவையை வளர்ப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. விண்ணுலக வாழ்வின் வாயிலே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவற கன்னியர் மற்றும் திருநிலையினர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து, அனைவரும் உம் அன்பு கட்டளையை கடைப்பிடித்து வாழவும் அதையே பிறருக்கு கற்பிக்கவும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுவோம்.

2. தாயும் தந்தையுமான இறைவா, மதம், மொழி, இனம் என்று பிரிந்து வாழும் ஒவ்வொருவரும் மனித நேயத்தையும், மாண்பையும் உணர்ந்து யாவரையும் மனதார ஏற்று வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எந்நாளும் நான் உங்களோடு இருப்பேன் என்றுரைத்த இறைவா, உமது சீடர்களைப்போல நாங்களும் உம்மில் நம்பிக்கைப் பெற்று எப்பொழுதும் உம்மில் நிலைத்திருந்து, விண்ணக வாழ்வை பெற தகுதியுடைவர்களாக எம்மை தயாரிக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. “அமைதியின் தூதுவனே” எம் இறைவா, தற்போதுள்ள பரப்பரப்பான இந்த ஆழ்நிலையில் வழிநடத்த தகுதியான தலைவர்களை தேர்ந்தெடுக்கவும், வெயிலில் தாக்கத்தால் பாதிப்புகள் குறையவும் நிகழும், பயங்கள் நீங்கி, சமாதானத்துடன் மக்கள் வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# புனித லெயனார்து முரியால்தோ

திருப்பலி
18.05.2026

## முன்னுரை

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

புனித லெயனார்து முரியால்தோ 1828ம் ஆண்டு தூரின் நகரில் பிறந்தார். இவர் தனது குடும்பத்திலும், சவோனாவைச் சேர்ந்த ஸ்கொலாப்பியரிடமும் மிகச் சிறந்த கல்வியைப் பெற்றார். இறைவார்த்தை மற்றும் இறையியலின் நெறிமுறைகளை விடாமுயற்சியுடன் படித்து முடித்தப்பின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இளங்குருவாக இருந்தபோது மேய்ப்புப்பணி செய்யவும், சிறைப்பட்டிருக்கும் இளையோர் மறைக்கல்வியின் வழியாக

நல்வாழ்வு பெறவும், மக்களுக்கு இறைவார்த்தையை எடுத்துரைக்கவும், அச்சிட்டு விசுவாசத்தைப் பரப்பவும் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். இவ்வாறு இவர் தனது ஆன்மீக வாழ்வை செபத்தாலும், பணி வாழ்வை எண்ணற்ற மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டு வாழ்ந்தார். தந்தை கபாசோ மற்றும் தொன் போஸ்கோவுடன் இணைந்து இவர் உழைத்ததால் தூரினிலுள்ள புனித அலோசியஸ் ஆரட்டரிக்கு இயக்குநராக அமர்த்தப்பட்டார்.

1873ம் ஆண்டு தூரின் நகரத்து சமயப் பணியார்வமுடைய புனித யோசேப்பின் சபையை (Pious Turin Society of Saint Joseph) நிறுவினார். சிறிது காலத்திற்குப் பின் இச்சபை புனித யோசேப்பின் தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் இளைஞர்களுக்கு சிறந்ததொரு கல்விப் பணியையும், மேம்படுத்தும் பணியையும் செய்தார். லெயனார்து, இளைஞர்களின்மீது கொண்ட அன்பினால் அவர்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்தார். பல்வேறு இன்னல்களுக்கிடையில் முப்பத்தி நான்கு ஆண்டுகள் ஆர்த்தியியனெல்லி என்ற கல்லூரியின் இயக்குநராய் பொறுப்பேற்று கிறிஸ்துவக்கோட்பாடுகளிலும் தொழிற்சட்டத்துறையிலும் இளைஞர்களைப் பயிற்றுவித்து, உருவாக்கினார். ஏழை, அனாதை இளைஞர்களுக்குப் பொருத்தமான பாதுகாப்பாளர்களை சட்டப்படி பெற்றுத்தந்தார். மேலும் கத்தோலிக்கப் பணியாளர்களுக்கு செயல் திட்டங்களையும், அமைப்புகளையும் உருவாக்கித் தந்தார். இவர் "அமைதியில் செயல்படு" (Silent Action), என்ற விருதுவாக்கை ஏற்றவராய் அனைவரோடும் இனிமையாகப் பழகி உதவியும் செய்தார்.

1887ம் ஆண்டு கொடிய நோயால் தாக்கப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்த இவர், தொன்போஸ்கோவின் இறையாசீரால் முழு குணம் பெற்று பல்வேறு இன்னல்களுக்கிடையிலும் பின்விளைவுகளுக்கிடையிலும் அயராது உழைத்தார். இவர் 1900ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் இவரை 1963ம் ஆண்டு அருளாளர் நிலைக்கும், 1970ம் ஆண்டு மே 3ம் நாள் புனிதர் நிலைக்கும் உயர்த்தினார். இவரின் அமைதியான பணியார்வத்தையும் இறைப்பணி புரிவதில் இவருக்கிருந்த உறுதியையும் நாம் பெற்று வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தங்களது திருத்தூதுப் பணியில் உண்மையுள்ளவர்களாக விளங்கவும் இறைமக்களை நிறையன்பில் வழிநடத்துவதில் சிறந்து விளங்கவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கிறிஸ்துவின் அழைப்பிற்கு அநேக இளையோர் பிறரின் நல்வாழ்விற்காக தங்களையே அர்ப்பணிக்க வேண்டுமென்றும், இறைவனின் அன்பினால்

உறுதிப்படுத்தப்பட்டு இறைமக்கள் தங்களது வாழ்க்கையில் அனுபவிக்கும் துன்பங்களையும், சோதனைகளையும் இறைத்தந்தையின் சித்தத்திற்கு முழுமையாக தங்களையும், தங்கள் பிள்ளைகளையும் கையளிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நாட்டு அரசியல் தலைவர்கள், சமூக, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் சமத்துவமும், சகோதரத்துவமும், நீதியுமுமான சிறந்த உலகினை கட்டியெழுப்ப வேண்டிய தாராள உள்ளத்தைப் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. திருப்பலியில் பங்குகொள்கின்ற நாங்கள், கொண்டாடும் மறைபொருள் நிகழ்ச்சி வழியாக புதுப்பிக்கப்பெற்று விசுவாசத்திலும், அன்பிலும் உறுதியாக நிலைத்திருக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## புனித முதலாம் யோவான்

திருப்பலி
18.05.2026

### முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இன்று நாம் மேனாள் திருத்தந்தையும் மறைசாட்சியுமான புனித முதலாம் யோவானின் திருநாளைக் கொண்டாடுகிறோம். 6-ஆம் நூற்றாண்டில் நிலவிய கடும் அரசியல் பதற்றங்களுக்கு இடையே, திருஅவையை வழிநடத்த திருத்தந்தை முதலாம் யோவான் தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது விசுவாசத்தில் எவ்வித சமரசமும் செய்துகொள்ள மறுத்ததால், மன்னர் தியோடரிக் இவரைச் சிறையில் அடைத்தார் திருஅவை மீதான தனது அர்ப்பணிப்புக்காகவும், புனித பேதுருவின் வாரிசாகத் தான் வகித்த பொறுப்புக்காகவும், ரவென்னா நகரில் சிறைவாசத்தின்போதே இவர் மறைசாட்சியாக உயிர் துறந்தார். நாம் இத்திருப்பலியைச் சிறப்பிக்கும் வேளையில், நாமும் புனிதரின் துணிச்சலைப் பின்பற்றி, நம் வாழ்வில் ஏற்படும் சோதனைகளின் மத்தியிலும் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்கத் தேவையான “உறுதி” என்னும் அருளை இறைவனிடம் வேண்டுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருச்சபைக்காக: புனித முதலாம் யோவானின் முன்மாதிரியைப் பின்பற்றி, நம் திருத்தந்தையும், ஆயர்களும், பிற தலைவர்கள் அனைவரும் நற்செய்தியின் உண்மையை மிகுந்த துணிச்சலோடும், உறுதியோடும் தொடர்ந்து பறைசாற்ற வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுவோம்.


2. தலைவர்களுக்காக: அரசியல் பதற்றங்கள் நிலவும் காலங்களில், அதிகாரத்தில் இருப்போர் பாகுபாட்டையோ பிளவுகளையோ

ஏற்படுத்தாமல், நீதி மற்றும் அமைதியை நிலைநாட்ட உழைக்க வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுவோம்.

2. துன்புறுத்தப்படுவோருக்காக: திருத்தந்தை புனித முதலாம் யோவானின் பரிந்துரையின் வழியாக, தங்கள் விசுவாசத்தின் நிமித்தம் சிறைவாசம், கொடுமைப்படுத்துதல் அல்லது புறக்கணிப்பு போன்ற துன்பங்களை அனுபவிக்கும் கிறிஸ்தவர்கள் அனைவரும், இறைப்பிரசன்னத்தின் வல்லமையை உணர்ந்துகொள்ள வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுவோம்.

3. நம் சமூகத்திற்காக: நாம் அனைவரும் சேவை மனப்பான்மையில் வளர்ந்து, நம் அன்றாட வாழ்வில் கிறிஸ்துவின் ஒளியாகச் செயல்படவும், வாழ்வின் அர்த்தத்தையோ நீதியையோ தேடித் தவிக்கும் மக்களுக்கு உதவவும் வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுவோம்.

4. விண்ணகம் சென்ற நம் அன்புக்குரியவர்களுக்காக: இவ்வுலக வாழ்வின் சோதனைகளைக் கடந்து சென்ற அவர்கள் அனைவரும், இறைவனின் விண்ணக அரசில், அவரது திருமுன் பேரின்பத்தில் மகிழ்ந்திருக்க வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுவோம்.



## பெந்தக்கோஸ்து பெருவிழா

திருப்பலி
24.05.2026

### முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *திப. 2: 1-11* II. *1கொரி 12: 3-7, 12-13* *யோவா. 20: 19-23*

ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கன்றீர் என்ற திருப்பாடலின் வரிக்கு ஏற்ப தூய ஆவியார் திருவிழாவைக் கொண்டாட அழைக்கப்பட்டிருக்கிறோம். பெந்தகோஸ்து என்னும் சொல்லுக்கு ஐம்பதாவது நாள் என்று பொருள். இது அருவடைக்காக நன்றி செலுத்தும் யூதத் திருவிழாவுக்குப்பின் ஐம்பதாவது நாள் கொண்டாட்டப்படுகிறது. இது வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. இயேசு உயிர்த்தெழுத்தப்பின் விண்ணேற்றம் அடைந்து அதன் பிறகு 10ம் நாளில் திருத்தூதர்கள் மற்றும் சீடர்கள்மீது தூய ஆவியானவர் இறங்கிவந்த நிகழ்வு பெந்தகோஸ்தே தினமாக கொண்டாடப்படுகிறது. இது திருஅவையின் பிறந்த நாளாகவும் கருதப்படுகிறது. இயேசு திருமுழுக்கு பெற்றபோது அவர்மீது தூய ஆவியானவர் இறங்கி வந்தார். இயேசுவின் சீடர் யோவானும் இயேசு தூய ஆவியால் வழங்குவார் என்றார். இயேசுவின் அன்பு சீடர்களும் அன்னை மரியாளும் திருஅவையின் சீடர்களும் தூய ஆவியினால் ஆட்கொள்ளப்படுகின்றனர்.

இறைவன் உலகைப் படைக்கும்போது வெறுமையாக இருந்தது. தனது ஆவியின் வல்லமையினால் அனைத்தையும் படைத்தார். தனது உயிர் மூச்சினால்தான் மனிதனை படைத்தார். கடவுள் இந்த உலகத்தைப் படைத்து அவருடைய மாட்சிமைக்காக மட்டுமல்ல, அன்பின் வெளிப்பாட்டால்தான். மனிதர்களைப் படைத்து படைப்புக்கெல்லாம் அவனையே பொறுப்பாளராக மாற்றியதும் அன்பின் வெளிப்பாடுதான். அப்படிப்பட்ட இறைவனை நாம் எப்போதும் போற்றிப்புகழ வேண்டும். இயேசு உயிர்த்தப் பிறகு தனது சீடர்களுக்குக் கொடுத்த கொடை எதுவென்றால் பிறருடைய பாவங்களை மன்னிப்பது. உயிர்த்த இயேசு உலகத்தை வெற்றிக் கொண்டார். இயேசுவின் பணியை நாம் தொடர்ந்து செய்யும்போது பல கஷ்டங்கள் இன்னல்கள் இடையூறுகள் வரலாம் அவற்றையெல்லாம் மறந்து பிறரை மன்னித்து நற்செய்திப் பணியைத் தொடர வேண்டும். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் பாவ மன்னிப்புப் பெற்றுள்ளோம். அந்த அனுபவத்தை பிறரோடு பகிர்வோம். புதுப்படைப்பாவோம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசுவின் சீடர்கள் தூய ஆவியின் வருகைக்காக காத்திருந்தார்கள். இந்த விழாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த மக்கள் பலர் கிறிஸ்தவ மதத்தில் இணைந்தனர். அந்தளவுக்கு அர்த்தமுள்ள விழாதான் பெந்தகோஸ்தே பெருவிழா தொடர்ந்து திருப்பலியில் தூய ஆவியாரின் அருள்வேண்டி பக்தியுடன் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அமைதியின் ஊற்றே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் அருட்பணியாளர்கள் ஒவ்வொருவரும் தூய ஆவியாரின் அருளைப்பெற்று அமைதியின் வழியில் மக்களை வழிநடத்த தேவையான அருட்கொடைகளை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அரசருக்கெல்லாம் அரசரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மக்கள் நலனில் அக்கறைக்கொண்டு உலகில் அமைதி நிலவவும், தூய ஆவியின் துணையோடு தேர்தலில் நல்ல தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவும், வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒளியாம் இறையே எம் இறைவா, இளைஞர்கள் மனம்போன போக்கில் வாழாமல் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்து நல்ல பாதையைத் தேர்ந்தெடுத்து அனைவருக்கும் ஒளியாக விளங்க வேண்டிய உமது அருட்கொடைகளால் நிரப்பி வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இருளகற்றி ஒளிக்கொடுப்பவரே, எங்கள் வாழ்வில் உமது பாதையின் வழியைக் கண்டு அவ்வழியில் எங்களை முழுமையாக அர்ப்பணித்து நாங்கள் பெற்றுக்கொண்ட ஒளியில் எம் சகோதர சகோதரிகளையும் அவ்வொளியில் வழிநடத்த தேவையான அருட்கொடைகளை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# திருஅவையின் தாய் அன்னை மரியா

திருப்பலி
25.05.2026

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, திருச்சபையின் அன்னையாம் புனித கன்னி மரியாவைச் சிறப்பிக்கும் இக்கொண்டாட்டத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நிறுவப்பட்ட இந்த நினைவு நாள், சிலுவையின் அடியில் இயேசு புனித யோவானை அவளுடைய தாய்மைப் பராமரிப்பில் ஒப்படைத்தது போலவே, நம்மையும் மரியாவின் தாய்மைப் பராமரிப்பில் ஒப்படைத்தார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. நாம் இந்த நற்கருணைப் பலியைச் சிறப்பிக்கும் வேளையில், திருச்சபைக்காகப் பரிந்துபேசுமாறு நம் அன்னையாம் மரியாவை நோக்கித் திரும்புகிறோம் கடவுளின் திருவுளத்திற்கு அவள் அளித்த "ஆம்" என்ற ஒப்புதலை நாமும் எதிரொலிக்கத் தேவையான வலிமையை அவளிடம் வேண்டுகிறோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருச்சபையின் அன்னையாம் மரியாவின் வழிகாட்டுதலின் கீழ், நாம் "உயிருள்ள கற்களாக"த் திகழ்ந்து, மாறிவரும் நம் உலகிற்கு நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அடித்தளமாக அமைத்துத் தர ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுகிறோம்.

2. அவர்கள் மரியாவின் தாழ்மையையும், பிதாவின் திட்டத்தின் மீதிருந்த அவளது நம்பிக்கையையும் பின்பற்றி, வெறுப்புக்கும் பிரிவினைக்கும் பதிலாக அமைதியையும் புரிதலையும் தேடுபவர்களாகத் திகழ வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுகிறோம்.

3. திருச்சபையின் அன்னையாம் மரியாள் அவர்களை ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், வாழ்வையும் அன்பையும் வளர்க்கும் அவர்களின் அழைப்பில் அவர்களுக்குத் தேவையான வலிமையை அளிக்கவும் வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுகிறோம்.

4. தன் மகனுக்கு ஆறுதல் அளித்த மரியாள், நோயுற்றோர், துயருற்றோர், தனிமையில் வாடுவோர் மற்றும் துக்கம் அனுசரிப்போருக்கு அருகில் இருந்து அவர்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுகிறோம். நம் சமூகத்திற்காக: நம் புனித அன்னையின் முன்மாதிரியைப் பின்பற்றி, மரியாவின் "ஆம்" என்ற ஒப்புதல் நம் ஒவ்வொருவரையும் நம் வாழ்வை இறைவனின் திருவுளத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்கத் தூண்ட வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுகிறோம்.

# புனித பிலிப்பு நேரி

திருப்பலி
26.05.2026

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இறை இயேசுவில் அன்புமிக்கவர்களே, புனித பிலிப்பு நேரி அவர்களின் விழாவை இன்று கொண்டாடுகிறோம். இவர் இத்தாலியில் பிளாரன்ஸ் நகரில் பிறந்தவர். 26 வயதில் வணிகத் தொழிலை விட்டுவிட்டு தமது ஆன்மீக நலனைக் குறித்தும் மற்றவர்களின் ஆன்மீக ஈடேற்றத்தை முன்னிட்டும் உரோமை நகர் சென்றடைந்தார். தத்துவக்கலை, இறையியல் பயின்றதோடு செபத்திலும் தவ முயற்சியிலும் தம்மை மிகவும் ஈடுபடுத்திக்கொண்டார். அந்நகரில் 12மைல் சுற்றளவில் இருந்த புகழ்மிக்க ஏழு தேவாலயங்களையும் மாலையானதும் நடந்தே சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டு, இரவில் தூய செபஸ்தியாரின் புதைக்குழி வளாகத்தில் தங்குவார்.

மேலும் நலிவுற்ற மக்களின் நலன்களைக் கருதி மருத்துவ மனைகளில் நோயாளிகளைச் சந்திப்பார். தெருவழியாகச் செல்லும்போது ஆன்மீகத்தில் அக்கறையற்றவர்களை இனங்கண்டு, தமது திறமையான பேச்சினாலும் அணுகுமுறைகளினாலும் அவர்களை இறைவன் பக்கம் மனம்மாறச் செய்வார். இவரது ஆன்ம குரு இவருக்கு குருத்துவத்தில் ஆர்வம் ஊட்டினர். குருப்பட்டம் பெற்றபின் 33 ஆண்டுகளாக "ஆரட்டரி" என்று அழைக்கப்படும் செபக்குழுவை பல குருக்களை சேர்த்துக்கொண்டு நடத்தினார். இவர்களை (ஆரட்டோரியன்ஸ்) ஜெபக்குழுவினர் என்று இந்நாள்வரை போற்றப்படுகின்றனர்.

இவர் திருப்பலி நிறைவேற்றும்போதெல்லாம் பரவசத்தில் ஆழ்ந்துவிடுவார். இளைஞர்கள் பலரை ஆன்மீக வாழ்வுக்குக் கொண்டு வருவதுடன் அவர்களை எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கவும், ஆழமான இறையனுபவம் தாழ்ச்சி, ஒறுத்தல், ஆசைகளைக் கட்டுப்படுத்துதல், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறுதல் போன்ற புண்ணிய செயல்களை இளைஞர்களுக்கு பயிற்சியளித்தார். இவர் "உரோமை நகரின் இரண்டாம் அப்போஸ்தலர்" என அழைக்கப்பட்டார். ஒருமுறை நற்கருணை உட்கொண்டபின் நன்றி செலுத்தாமல் வெளியேறிய மனிதன் பின்னாலேயே செல்லும்படி எரியும் திரிகள் ஏந்திய இரண்டு சிறுவர்களை அனுப்பி அவனுக்கு நல்ல பாடம் கற்பித்தார். அதன்பின் அம்மனிதன் நன்மை வாங்கியதும் கோவிலிலிருந்து நன்றி செலுத்திய பின்னரே வெளியேறுவான். திருந்த மனமில்லாதவர்களையும் சாவின் கொடுமையைப் பற்றி சொல்லி திருத்துவார். சிறிய அற்பப் பாவத்திற்கும் நம்மை நெருங்கவிடாமல் பாதுகாத்தால் சாவான பாவங்கள் நம்மை நெறுங்காது என்று சொல்லி குற்றங்களுக்கு இடந்தராமல் பாதுகாப்பார். இப்புனிதரைப் பற்றி தெரிந்துக்கொண்ட நாம் இன்றைய திருப்பலியில் இப்புனிதரின் நல்வழிகளைப் பின்பற்றும் வரத்தைத் தரவேண்டுமென்று மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல இறைவா, நீர் விட்டுச்சென்ற திருச்சபையின் வளர்ச்சிக்காக உம்மால்ஆசீர்வதிக்கப்பட்டு தெரிந்துக்கொள்ளப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபையின் மக்களை புண்ணிய நெறியில் நடத்திச்செல்லும் அருளையும், ஆசீரையும்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, உமது அன்பின் அடையாளமாக விளங்கும் நற்கருணையை உட்கொள்ளும்போது பக்தியோடும், நன்றியோடும் பெற்றுக்கொள்ளவும், நற்கருணை உமது உயிருள்ள உடல் என்பதை உணர்ந்து தினமும் உம்மை உட்கொள்ளும் வரத்தைப் பெறும் வாய்ப்பைத் தரவேண்டுமென்று மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, நாங்கள் செய்யும் பாவங்களை நாங்கள் செய்தது தவறு என்று உணரும்போது எங்கள் பாவங்களை மன்னிக்கும் நீர், இன்றைய விழாவினை சிறப்பிக்கும் புனித பிலிப்பு நேரியைப்போல அற்பப்பாவங்களையும் விலக்கி நடக்கும் கிருபையும் உதவியும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி

திருப்பலி
29.05.2026

## முன்னுரை

*சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்*

ஜோசப் கொவால்ஸ்கி 1912ம் ஆண்டு போலந்து நாட்டிலுள்ள க்ராகௌ என்னும் ஊரில் பிறந்தார். 1929ம் ஆண்டு சலேசிய சபையில் சேர்ந்தார். தனது முதல் அர்ப்பண நாளன்று தனது ஆன்மீக குறிப்பேட்டில், "இயேசுவே, எனக்கு வலிமையும் உறுதியும் கொண்ட உள்ளத்தைத் தாரும். நான் புனிதராக வேண்டும், உம்மாலன்றி என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்னை அன்பு செய்யும் உம்மோடு என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும்" என்று எழுதி வைத்திருந்தார். களப்பயிற்சி பணியை முடிக்கும் நிலையிலிருந்தபோது தனது மனவலிமையினாலும் ஆன்ம குருவின் வழிகாட்டுதலாலும் அதற்கு தீர்வு கண்டார். 1938ம் ஆண்டு அவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டபின் அவரது மாநிலத்தலைவருக்கு உதவியாளராக இருக்கும் பொறுப்பினை ஏற்றார். கடிதங்களை எழுதுவது, சுற்றுமடல்களை அனுப்புவது, குறிப்புகளைச் சேகரிப்பது போன்ற எளிய பணிகளைத் திறம்படச் செய்தார். தான் புனித ஜான் போஸ்கோவின் புதல்வன் என்பதை ஒருபோதும் மறந்துவிடவில்லை. இசையில் அதிக ஆர்வம் கொண்டவராக இருந்ததினால், மாணவர்களை ஒன்று கூட்டி, திறமையுடன் இசைக்குழு ஒன்றை வழிநடத்தி வந்தார்.

அந்நேரத்தில் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. அப்போது சிறைப்பிடிக்கப்பட்டு, சிறையில் இவரும், இவருடன் பிடிப்பட்ட மற்ற

குருக்களும் பல கொடுமைகளுக்கு ஆளானார்கள். அங்கு மனித நேயம் மறுக்கப்பட்டு விலங்கினும் கேவலமாக நடத்தப்பட்டார்கள். அந்நிலையிலும் தனது மனித மாண்பிலே உறுதியாக இருந்து இறையரசைக் கட்டியெழுப்பினார். 1942ம் ஆண்டு பிப்ரவரி 12ம் நாள் எழுதிய கடிதத்தில் அவர் பின்வருமாறு எழுதி வைத்திருந்தார். "எனது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இறைவனது வல்லமையை உணர்கிறேன். நான் எங்கிருந்தாலும் எனக்கு என்ன நேர்ந்தாலும் உலகமனைத்தையும் ஆள்கின்றவரும் ஒவ்வொருவரையும் கண்காணிப்பவருமான, இறைவனின் பராமரிப்பில் நான் இருக்கிறேன்".

1942ஆம் ஆண்டு ஜூன் 2ம் நாள் ஆஸ்விட்ஸ் என்ற இடத்திலிருந்து, டக்காவு என்ற இடத்திலுள்ள சிறைச்சாலைக்கு 60 குருக்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அதில் தந்தை கொவால்ஸ்கியும் ஒருவர். அவர் தனது கையில் செபமாலை ஒன்றை வைத்திருப்பதைக் கண்டறிந்த சிறை அதிகாரி அதைக் காலால் மிதிக்கச் சொன்னார். அதைச் செய்ய மறுத்ததால் அவரை டக்காவுக்கு அனுப்பாமல் ஆஸ்விட்ஸ் என்ற இடத்திலே கொடூரமாக நடத்தினார். 1942ஆம் ஆண்டு ஜூன் 2ம் நாள் அவரைக் கொல்வதற்காக அழைத்து செல்லப்பட்டபோது அவர் தன்னிடமிருந்த ரொட்டித் துண்டுகளைத் தம் நண்பர் சிஜிஸ்போண்டி கொலன்கொவால்ஸ்கியிடம் கொடுத்து "இதை பெற்றுக்கொள், இது எனக்கு இனி தேவைப்படாது" என்று கூறினாராம். பிறகு அவர் "எனக்காகவும் என்னைத் துன்புறுத்துவோருக்காகவும் செபியுங்கள்" என்று உரத்த குரலில் கூறினார். அவரைத் துன்புறுத்தியபின் கழிவு நீர்த்தொட்டியில் உயிரோடு அமிழ்த்திக் கொன்றனர். அப்போது அவருக்கு வயது 31. இரண்டாம் உலகப்போரின்போது மறைசாட்சியாக இறந்த இவரையும், இவரோடு சேர்ந்த 108 பேரையும் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர், 1999ம் ஆண்டு 12ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். நம்பிக்கைக்கு சான்று பகரும் இறைவனின் பண்பு நம்மில் வளரவும், இயேசுவுக்காக தன்னையே வழங்கும் தியாகத்தை நாமும் பெறவும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து, இறைமக்களை நம்பிக்கையில் உறுதியடையச் செய்து, இறையரசின் உன்னத சாட்சிகளாக வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. துறவறப் பணியிலும், மறைக்கல்வி பணியிலும், மறைப்பரப்புப் பணியிலும் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் தங்களின் வாழ்வில் வரும் இடர்கள், இடையூறுகள், துன்பங்கள், சோதனைகள் ஆகியவற்றை பொறுமையுடன் தாங்கி, இறையாட்சியை இந்த மண்ணிலே தொடர்ந்து கட்டியெழுப்ப வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. பல்வேறு காரணங்களால் துன்புறும் மாந்தர் அனைவருக்கும் ஆறுதலித்து அவர்கள் தங்களின் துன்பங்களை உமது துன்பங்களோடு இணைத்து உமது திருவுளத்திற்கு முற்றிலும் பணிந்து வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இங்கு கூடியிருக்கும் உம் மக்களாகிய நாங்கள் எங்கள் வாழ்வில் வரும் இன்னல்களையும், இடையூறுகளையும், சோதனைகளையும், வேதனைகளையும் பொறுமையுடன் தாங்கி உமது வார்த்தையை வாழ்வாக்கி உமக்கேற்ற சாட்சிகளாய் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா

திருப்பலி
31.05.2026

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

I. *விப. 34: 4-6, 8-9* II. *2 கொரி 13: 11-13* *யோவா. 3: 16-18*


திருஅவையானது இன்று மூவொரு கடவுள் பெருவிழாவை சிறப்பிக்கின்றது. இது மனிதனின் புரிதலுக்கு அப்பாற்பட்ட மறையுண்மை. கடவுள் ஆள் வகையில் தந்தை, மகன், தூய ஆவி என மூவராய் இருந்தாலும் இறைத்தன்மையில் ஒரே இறைவனாக விளங்குகின்றார் என்பதே நம் அனைவரின் அசைக்க முடியாத விசுவாசம் ஆகும். நிசேயா திருச்சங்கத்தில் மூவொரு இறைவன் கோட்பாடு உறுதி செய்யப்பட்டு நிசேயா விசுவாசப் பிரமாணம் உருவானது. மூவொரு இறைவனின் ஒருமித்த செயற்பாட்டிற்கு திருப்பலியிலே இடம்பெறும் தூய ஆவியின் வருகைக்காக மன்றாடும் செபம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றது. மூவொரு இறைவனின் பெருவிழாவைக் கொண்டாடும் நாம் அவரது மகிமையையும் பெருமையையும் உணர்ந்து அவரை முழு உள்ளத்தோடும், ஆன்மாவோடும், வலிமையோடும் அன்பு செய்யவேண்டும். மூவொரு இறைவனில் இருக்கும் அன்புறவு நம் வாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டும். இன, மத, மொழி, நிற அடிப்படையில் வேற்றுமை பாராட்டுவது மூவொரு இறைவனுக்கு எதிரான பாவமாகும். ஒற்றுமையில் வாழ இத்திருப்பலி வழியாக இறையருள் வேண்டுவோமாக..

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இயேசுவின் திருமுழுக்கின் போது முதன் முதலில் வெளிப்படுத்தப்பட்ட மூவொரு கடவுளின் செயல்பாட்டால் நிரம்பி வழியும் திருஅவையையும் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர், இறைமக்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து உம் ஒளி நோக்கி வழிநடத்திக் காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இனத்தால், பேசும் மொழியால், மதத்தால் மனித மாண்பிற்கு ஊறுவிளைவிக்கும் காரணிகளை கண்டறிந்து மனிதத்தின் பேரால் ஒன்றிணைந்து சகோதர அன்பை பின்பற்றி நீதியின் சமூகம் உருவாகவும், வெறுப்பு, பகைமை, பழிவாங்குதல் போன்றவற்றை அகற்றி மூவொரு கடவுளின் ஒருமைப்பாட்டைக் கைக்கொண்டு வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மூவொரு இறைவனின் மகிமையையும் பெருமையையும் நாம் உணரவும், அவரை முழு உள்ளத்தோடும் ஆன்மாவோடும் வலிமையோடும் அன்பு செய்யவும் மூவொரு இறைவனில் இருக்கும் அன்புறவு நம் வாழ்க்கையில் பிரதிபலிக்கவும், பங்கிலும் பணி செய்யும் இடங்களிலும் ஒற்றுமையுடன் பணி செய்யவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# தோமினிக் சாவியோ
## - வாழ்க்கை வரலாறு

*திருமதி ரோஸ்லின் மேரி*


வட இத்தாலியில், முரியால்டோ நகரில் 1842ம் ஆண்டு ஏப்ரல் 2ம் நாள் காலை 9மணிக்கு சார்லஸ் சாவியோ-பிரிஜித்தம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது மகனாய் பிறந்தார் சாவியோ. பிறந்த அன்றே மாலை 5 மணிக்கு திருமுழுக்கு அருட்சாதனத்தின் வழியாய் அளவில்லா அன்பைப் பொழிந்தனர் பெற்றோர். நான்கு வயதிலிருந்தே செபிக்கும் வழக்கம் கொண்டவர், பக்திமிக்கவர். காற்றோ, குளிரோ, மழையோ எதையும் பொருட்படுத்தாமல் அதிகாலை 5 மணிக்கே ஆலயம் செல்வதும், தவறாது பூசை உதவி செய்வதும் இயல்பாகவே இவருக்கிருந்த ஆசைகள். நற்கருணை அருட்சாதனத்தைப் பற்றிய மறையுண்மைகளையும் கற்றுத் தெளிந்திருந்த அவருக்கு 12 வயதில் நற்கருணை வழங்கவேண்டுமென்ற விதியைத் தளர்த்தி, 1849ஆம் ஆண்டில் அவரது 7வது வயதில் அவரது பங்குத்தந்தை முதல் நற்கருணையை வழங்கினார். நற்கருணையை உண்ட அந்த நாளிலே, "நான் அடிக்கடி ஒப்புரவு சாதனத்தைப் பயன்படுத்தி, என் ஆன்ம குருவானவர் எனக்கு உத்தரவு கொடுக்கும்போதெல்லாம் நற்கருணை உட்கொள்வேன், கடன்திருநாட்களைச் சரியாக அனுசரிப்பேன், இயேசு கிறிஸ்துவும் அன்னை மரியாளும் எனது நண்பர்கள், இறந்தாலும் பாவம் செய்ய மாட்டேன்" என்று தீர்மானங்களை எழுதி வைத்தார்.

புனிதத் தன்மையிலும், படிப்பிலும் முன்னேற வேண்டுமென்ற ஆவலுடன் 1859ம் ஆண்டு அக்டோபர் 29ம் நாள் தோமினிக் தன் தந்தையுடன் புனிதத் தொன்போஸ்கோவைச் சந்தித்து அவரின் கல்வி நிலையத்திலும், விடுதியிலும் தான் சேர்ந்து படிக்க விரும்புவதாகக் கூறினார். சாவியோவின் கள்ளங்கபடமற்ற முகம், நல்ல குணமும், பக்தியும், அறிவுக் கூர்மையும் அவரைக் கூர்ந்தது. மெலிந்து காணப்பட்ட சாவியோவிடம், அவன் உடல்நிலைப்பற்றி எடுத்துக் கூறினார். அதற்கு சாவியோ அடிகளரே, நான் துணி, நீங்கள் தையல்காரர், இத்துணியைக் கொண்டு நல்லதொரு ஆடையைத் தைத்துக் கொடுங்கள் என்று பணிவோடு கூறினார். இதைக்கேட்ட போஸ்கோ, இடம் பிடித்த சாவியோ தொன்போஸ்கோவின் புனிதத்திலும், மடத்திலும் பள்ளியிலும் இவன் நாளைய புனிதனாவான் என்பதை உணர்ந்தார்.

மறையுரையில் ஒரு நாள், "நாம் புனிதர்களாக வேண்டும் என்று இறைவனின் விருப்பம், புனிதர்களாவது மிகவும் எளிதான செயல், புனிதர்களுக்கு விண்ணகத்தில் பெரியதோர் பரிசு தயாரிக்கப்படுகிறது" என்று சொன்னதைக் கேட்டு தொன்போஸ்கோவிடம் தானும் புனிதராக வேண்டும் என்ற உள்ளத்து ஆசையைத் தெரிவித்தான். ஒருநாள், தொன்போஸ்கோவிடம், சாவியோ, "தோமினிக் என்னும் பதத்தின் பொருள் என்ன?" என்று கேட்டார். "தோமினிக்" என்னும் பதம் "தோமினுஸ்" என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது. தோமினுஸ் என்றால் "ஆண்டவர்" என்று பொருள் ஆதலால் தோமினுஸ் என்பதற்கு "ஆண்டவருக்கு உரியவன் அல்லது சொந்தமானவன்" என்று பொருள் என விளக்கினார் தொன்போஸ்கோ, உடனே தோமினிக் சாவியோ என்னைப் புனிதனாக்கும்படி வேண்டுகிறேன். அதற்கு நான் அவசியம் ஆண்டவருக்கு சொந்தமாக வேண்டும், அவ்விதம் ஆகாதுபோனால், நான் பயனற்றவனாவேன் அல்லவா? என்றார். அவரின் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் கண்டாலும் சிறுவன் என்பதால் கடுந்தவங்களை மேற்கொள்ள அனுமதிக்கவில்லை, பதிலாக, சாவியோ அடிக்கடி தேவநற்கருணை பேழைக்கு முன்பாக முழந்தாள் படியிட்டு இயேசுவிடம், "இயேசுவே நீர் என்னைப் புனிதனாக்கும்" என்று சொல்லி ஆறுதல் அடைவார்.

சாவியோ தமது ஆண்டவர்களுடைய ஆன்மாக்களை ஆண்டவர் பாதம் கொண்டு சேர்க்க இனியமொழி, புன்னகை, அருள்நிறைந்த பார்வை, நல்ல நடத்தை என்ற வித்தியாசமான, வியப்புக்குரிய வழிகளைப் பின்பற்றினார் அந்த சிறிய அப்போஸ்த்தலர், அவர் ஆரட்டரியில் வாழ்ந்தபோது, மரியன்னையின் புண்ணியங்களைப் பின்பற்ற "அமலஉற்பவக்குழு" ஒன்றை மாணவர்களுக்கு ஏற்படுத்தி, அதற்குரிய ஒழுங்கு முறைகளுக்கு தொன்போஸ்கோவின் இசைவையும் பெற்றார். இக்குழு வழியாக மரியாயின் பக்தி, சலேசிய சபையில் இன்னும் வளர்ந்து கொண்டே வருகிறது.

அவரது இறுதி நாட்களில் அநேக பரவசக் காட்சிகள் இவருக்கு அருளப்பட்டன. ஒரு சமயம் தொடர்ந்து 6 மணி நேரம் நற்கருணைப் பேழைக்கு






முன் பரவசத்தில் மூழ்கினார். சாவியோ அடிக்கடி உடல் நலமில்லாது இருந்தார். ஓய்வு எடுக்க அவரது வீட்டிற்கு இரண்டரை ஆண்டுகால விடுதி வாழ்க்கைக்குப் பிறகு அவரது வீட்டிற்கு அனுப்பப்பட்டார். 1857 மார்ச் மாதம் 9ம் தேதி மாலை அவரின் உடல்நிலை மோசமானது. அவர் மிகவும் வலிமைக் குன்றியவராய், இறக்கும் வேளையில் "ஆகா, என்ன இன்பமயமான அற்புத காட்சி" என்று விண்ணகக் காட்சி பற்றி பரவச வார்த்தைகள் கூறி உயிர்துறந்தார். அப்போது அவருக்கு வயது 15. இவரது கல்லறை இத்தாலியிலுள்ள தூரின் நகரிலுள்ள சகாய அன்னைப் பேராலயத்தில் உள்ளது. 1950 ம் ஆண்டு மார்ச் திங்கள் 5ம் நாள் முத்திபேறு பட்டம் கொடுக்கப்பட்டது. 1954 ம் ஆண்டு ஜீன் 12ம் நாள், திருத்தந்தை 12ம் பத்திநாதர் இவருக்குப் புனிதப் பட்டம் கொடுத்தார்.

தோமினிக் சாவியோ என்னும் இந்த இளவல், இரத்தம் சிந்தா, பீடவணக்கம் பெற்ற புனிதர்களில் வயதில் இளையவர். இவ்விளமுகம், புனிதத்தன்மையில் உச்சியினை வந்தடைவதற்கு இறையருளுக்குப் பிறகு புனித தொன்போஸ்கோவே காரணம். அவர் திருமுழுக்கு அருட்சாதனத்தில் பெற்ற மாசின்மையை வானதூதருக்குரிய தூய்மையை தம் வாழ்நாளில் என்றும் இழந்தவர் அல்லர். கிறிஸ்தவ புண்ணியங்கள் பிற நற்பண்புகள் அனைத்தும் அவரிடம் சிறந்து மிளிர்ந்தன. அவர் அவைகளைத் தளராது கைக்கொண்டார். வீரத்தன்மையுடன் கடைப்பிடித்தார். தூய உள்ளம் பெற்றோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இறைவனைக் காண்பர்" என்ற அன்பர் இயேசுவின் அமுதவாக்கு அவருடைய இதயத்தில் ஒன்றி அவரை வழிநடத்துவதாயிற்று. அவருடைய வாழ்க்கைப் பயன்பெற்றுப் பொலிந்தது, இறைவனின் பூங்காவில் இன்ப நறுமணம் கமழும் அழகிய லீலியாக மலர்ந்தது. அவர் புனித இளவல், புனித இளமுகம் என்ற பெயர் பொருந்தப்பெற்றார். இம்மண்ணுலகில் இளைஞர் அனைவருக்கும் தலை சிறந்த எடுத்துக்காட்டாக துலங்கிக் கொண்டிருக்கிறார். இதோ பாவம் செய்யாமலே மறைந்த இளமுகம் தோமினிக் சாவியோ வாழ்த்துவோம், வழிநடப்போம்.



# புனித மரிய தோமினிக்கா மசரெல்லோ

## வாழ்வு தரும் பாடம்

*திரு. ஜான் அலெக்ஸ்*

(தொன் போஸ்கோ நிறுவிய கிறிஸ்துவர்களின் சகாய அன்னையின் புதல்வியர் என்னும் சலேசிய அருட்கன்னியர் துறவற சபையின் தலைமை அன்னை)

இத்தாலியில் மார்நீஸ் என்னும் ஊரில் 1837 மே 9ம் நாள் பிறந்த மேரி டொமினிக்கா மசரெல்லோ, எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழும் பழக்கத்தையும் எல்லோரையும் மதித்துப் பழகும் பண்பையும் கொண்டிருந்தார். பங்கு தந்தை பெஸ்டாரினோ உருவாக்கி இருந்த அமல அன்னை சகோதரிகள் என்ற அமைப்பில் தமது 15 வயதில் உறுப்பினரானார். தொடர்ந்து பணியாற்றிய இவரை எங்கு சென்றாலும் சிறுவர்கள் மொய்த்துக் கொள்வார்கள். இவரின் அன்பில் நனைவார்கள். 23ம் வயதில் நகர் முழுவதும் டைப்பாய்டு காய்ச்சல் தொற்றுநோய் பரவியது. கிராமம் கிராமமாய் சென்று நோயுற்றோர்களுக்கு உதவி செய்தும் இறந்தவர்களை நல்லடக்கமும் செய்தார்கள். இதில் மசரெல்லோவிற்கும் டைப்பாய்டு காய்ச்சல் தொற்றியது. படுத்த படுக்கையான மசரெல்லோ, சாவின் வாயிலைத் தொட்டு நின்றார். நோயில் பூசுதலுக்கு பின் இறைவன் முன்குறித்திருந்த மசரெல்லோ, நலமுடன் எழுந்தார். ஆனாலும் முன்பிருந்த வேகம் குறைந்து நோயின் தாக்கம் அதிகமாக இருந்தது. எனவே வீட்டிலேயே ஓய்வெடுத்து வந்தார் மசரெல்லோ.

மசரெல்லோ, ஒரு நாள் தெருவில் நடந்து வருகையில் எதிரே மிகப்பெரிய கட்டிடம் இருப்பது போலவும் அதன் முற்றத்தில் பெண் குழந்தைகள் விளையாடுவது போலவும் கண்டார். அப்போது "இவர்களை உன்னிடத்தில் ஒப்படைக்கிறேன்" என்ற குரலொலிளைக் கேட்டார். இதே போன்ற அனுபவத்தை புனித தொன் போஸ்கோவும் பெற்றார். முற்றத்தில் கைவிடப்பட்ட பெண் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பதையும், "இவர்கள் எனது குழந்தைகள். இவர்களைக் கவனித்துக்கொள்" என்ற குரலொலியையும் கேட்டார். தூய ஆவி இருவரின் மனதிலும் செயலாற்றினார்.

அருட்தந்தை பெஸ்டாரினோ, அமல அன்னை சகோதரிகள் அமைப்பில் இருந்த 15 இளம் பெண்களையும் ஆன்மீகத்தில் வளர்த்தெடுத்தார். இவர்களைத் தனி இல்லத்தில் ஒரு குழுமமாக வாழ வைத்தார். இந்த சகோதரிகள் விரைவில் சில சிறுமிகளைத் தங்கள் இல்லத்தில் சேர்த்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் தையல் தொழில் கற்றுக்கொடுத்தார்கள். நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்பிய மசரெல்லோ மீதம் உள்ள பொருட்களை தம் வாடிக்கையாளர்களுக்குத் திருப்பிக் கொடுத்தார். மற்றவர்களிடம் உணவுக்காக கை ஏந்தி நின்றார்கள். தாங்கள் சாப்பிடாமல் தங்களிடம் உள்ள சிறுமிகளுக்குக் கொடுத்துவிட்டு பல நாட்கள் பட்டினி கிடந்தார்கள்.

ஏற்கனவே குருக்கள் மற்றும் சகோதரர்களுடன் சலேசிய சபையினர் மாணவர்களை வழிநடத்தி வந்தார்கள். இளம் பெண்களுக்கும் அதே போன்ற அமைப்பு வேண்டும் என்று நினைத்த தொன்போஸ்கோ இந்த சகோதரிகளது அமைப்புக் குறித்து கேள்விப்பட்டார். அவர்களது அர்ப்பணிப்பு உண்மையானது என்றால் அந்த அமைப்பை சலேசிய சகோதரிகள் சபையா உருவாக்கலாம் என்று முடிவெடுத்து அவர்களைச் சந்திக்க சென்றார். ஆனால் தங்கள் அமைப்பிற்கு உதவி கேட்க வந்திருப்பதுபோல ஒரு சிறுவனுடன் சென்றார்.

சந்தித்தார். அவர்களது பணி குறித்தும் வாழ்வின் தேடல் குறித்தும் விசாரித்தார். அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார். அமல அன்னையின் சகோதரிகள் அமைப்பில் இருந்த 15 பேரையும் வைத்து, "கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர்கள் சபை" யை 1872 ஜுலை 31ம் நாள் உருவாக்கினார். பொதுத் தேர்தல் நடத்தும்வரை தற்காலிகத் தலைவராக இருக்கும்படி மசரெல்லோவை தொன் போஸ்கோ கேட்டுக்கொண்டார். போதிய கல்வியறிவு இல்லை எனக் கூறி மறுத்த மசரெல்லோ, பின்னர் கீழ்ப்படிதலுடன் சம்மதித்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் மசரெல்லோ முதல் தலைவியாகத் தேர்வானார்.

இளம் பெண்களைப் பராமரித்தல், கற்பித்தல், மீட்பின் பாதையிலும் தனிமனித ஆளுமை வளர்ச்சியிலும் வழிநடத்துதல் ஆகியவற்றைத் தம் பணியின் இலக்காகக் கொண்டு செயல்பட்டனர். எல்லோருடனும் அமர்ந்து எப்படி வாசிப்பது, எப்படி எழுதுவது என்பதை முறைப்படி கற்றார். மசரெல்லோ தாழ்ச்சியுடன் அவர்களோடு சேர்ந்து தானும கற்றார். அறிவுத் தேடலுடன்



நிற்காது பணிகளை விரிவுப்படுத்தினார். தென் அமெரிக்காவிற்கு சகோதரிகளை அனுப்பினார். அவர்களை ஊக்கப்படுத்த அவர்கள் பணியாற்றி இடங்களைச் சென்று பார்வையிட்டார். அந்த பயணங்களில் கப்பல் சிதைவில் சிக்கினார். நோயுற்றார்.

மரணப் படுக்கையில் இருந்த மசரெல்லோ, தம் சகோதரிகளிடம், "என் இறப்பிற்குப் பிறகு நீங்கள் பேராசைப்படுவீர்களோ என்றும் அடுத்த தலைவி மீது பொறாமைப்படுவீர்களோ என்றும் நான் அஞ்சுகிறேன். அன்னை மரியாவே நமது சபையின் தலைவி என்பதை நினைவில் கொள்ளுங்கள். வழிநடத்தும் சுமையான பணியை ஏற்பவருக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடங்கள். இரண்டாவதாக ஒருவர் மற்றவருக்கு உதவிகள் செய்யுங்கள். ஆனால் உங்களுக்காக நியமிக்கப்படும் ஆன்ம குருவிடம் உங்கள் கை எப்போதும் இருக்கட்டும்" என்று கூறினார்.

இறைவனுக்கு முழு அர்ப்பணத்துடனும் அடுத்தவர்களுக்கு முழு அன்புடனும் உழைத்த மசரெல்லோ, இறைவன் தன்னை அழைத்தபோது 1881 மே 14ம் நாள் இறந்தார். திருத்தந்தை 11ம் பத்திநாதர் 1938 நவம்பர் 20ம் நாள் அருளாராக உயர்த்தினார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1951 ஜூன் 24ம் நாள் அன்று புனிதராக உயர்த்தினார்.



### தொன் போஸ்கோவின் வாழ்வில்

# கிறிஸ்தவர்களின் சகாய அன்னை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

தொன் போஸ்கோவின் வாழ்வு, கிறிஸ்தவர்களின் சகாய அன்னை மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையாலும் அன்பாலும் சிறப்பாக விளங்குகிறது. அவரது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்தால், சகாய அன்னையின் வழிநடத்தல் அவரது ஒவ்வொரு செயலிலும் எவ்வாறு பிரதிபலித்தது என்பதை தெளிவாக உணர முடிகிறது.

தொன் போஸ்கோ சிறுவயதிலேயே ஒரு அரிய ஆன்மிக அனுபவத்தை பெற்றார். அவர் கண்ட கனவில், அன்னை மரியாள் அவரை இளைஞர்களை அன்புடனும் பொறுமையுடனும் வழிநடத்த அழைத்தார். "அன்பினால் அவர்களை வெல்ல வேண்டும்" என்ற அந்த கனவின் செய்தி, அவரது வாழ்வின் அடித்தளமாக மாறியது. இக்கனவு அவரை ஒரு சாதாரண குருவாக அல்லாமல், இளைஞர்களின் தந்தையாகவும் ஆசிரியராகவும் உருவாக்கியது.

தொன் போஸ்கோ தனது வாழ்க்கையை வறிய, புறக்கணிக்கப்பட்ட, அன்புக்காக ஏங்கும் இளைஞர்களுக்காக அர்ப்பணித்தார். அவர் நிறுவிய ஓரட்டோரியோ (Oratory) என்பது கல்வி, விளையாட்டு, ஆன்மீகம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு அற்புதமான சூழல். இவ்விடத்தில் இளைஞர்கள் பாதுகாப்பாகவும் அன்போடும் வளர்ந்தனர். இந்தப் பணிகளில்

அவர் எப்போதும் சகாய அன்னையின் உதவியை நாடினார். "நாம் செய்யும் அனைத்தும் அன்னையின் அருளால் தான் நிறைவேறுகிறது" என்று அவர் நம்பினார்.

தொன் போஸ்கோவின் வாழ்க்கையில் பல சவால்கள் இருந்தன. பொருளாதார குறைபாடுகள், எதிர்ப்புகள், உடல் நலக்குறைவுகள் போன்றவை அவரை பலமுறை தளரச் செய்தன. ஆனால் ஒவ்வொரு முறையும் அவர் சகாய அன்னையின் முன்னிலையில் தன்னை ஒப்படைத்து மீண்டும் எழுந்தார். அவரது நம்பிக்கை வெறும் வார்த்தைகளில் மட்டுமின்றி, செயல்களில் வெளிப்பட்டது. அன்னையின் மீது கொண்ட இந்த உறுதியான நம்பிக்கை, அவரை எத்தகைய சோதனைகளையும் கடக்க வலிமையளித்தது.

சிறப்பாக, தொன் போஸ்கோ கட்டிய "சகாய அன்னை ஆலயம்" அவரது பக்தியின் உச்சமாகும். இவ்வாலயம், அன்னையின் உதவி எப்போதும் நம்மோடு இருப்பதை நினைவூட்டும் ஆன்மீக மையமாக விளங்குகிறது. இந்த ஆலயத்தின் கட்டுமானத்தில் ஏற்பட்ட பல தடைகளை அவர் அன்னையின் உதவியால் வெற்றிகரமாக கடந்து சென்றார். இதனால், "இந்த ஆலயத்தை கட்டியது நான் அல்ல, அன்னையே கட்டினார்" என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், தொன் போஸ்கோ நிறுவிய ளுயடநளயைெ இயக்கம் உலகம் முழுவதும் பரவியது. இந்த இயக்கத்தின் மையத்தில் சகாய அன்னையின் பாதுகாப்பு உள்ளது. இன்றும் சலேசிய குருக்கள் மற்றும் சகோதரர்கள், அன்னையின் வழிகாட்டுதலுடன் இளைஞர்களுக்காக சேவை செய்து வருகின்றனர். தொன் போஸ்கோ விதைத்த விதைகள், அன்னையின் அருளால் பல நாடுகளில் பலன்களை அளித்து வருகின்றன.

தொன் போஸ்கோவின் ஆன்மீக வாழ்வில், அன்னை மரியாள் ஒரு தாயாகவும் ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் இருந்தார். அவர் இளைஞர்களிடம் அன்னையின் மீது பக்தியை வளர்க்க மிகவும் முயன்றார். குறிப்பாக, "சகாய அன்னை" மீது நம்பிக்கை வைப்பது வாழ்க்கையில் வெற்றியும் சமாதானமும் தரும் என்று அவர் வலியுறுத்தினார். அவரது வாழ்க்கை நமக்கு ஒரு முக்கியமான பாடத்தை கற்றுக்கொடுக்கிறது: கடவுளின் பணியில் ஈடுபடும்போது, அன்னையின் உதவி நம்மை பாதுகாத்து வழிநடத்தும். மனித முயற்சியுடன் இணைந்த தெய்வீக அருள் தான் உண்மையான வெற்றியை அளிக்கிறது. தொன் போஸ்கோ இதை தனது வாழ்க்கை முழுவதும் நடைமுறையில் காட்டியுள்ளார்.

முடிவாக, தொன் போஸ்கோவின் வாழ்வு, சகாய அன்னையின் அன்பும் உதவியும் மனித வாழ்க்கையை எவ்வாறு மாற்ற முடியும் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு அழகான சாட்சியாகும். அவரது வாழ்க்கை நமக்கு நம்பிக்கை, அன்பு, அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மதிப்பை உணர்த்துகிறது. அன்னையின் வழிகாட்டுதலுடன் நாம் வாழ்ந்தால், எவ்வித சவால்களையும் கடந்து, பிறருக்கு ஒளியாக இருக்க முடியும்.



# திருஅவைச் செய்திகள்

திரு. ஜான் அலெக்ஸ்

## திருப்பீடத்துடன் இணைந்த பாக்தாத் கல்தேய திருஅவை

பாக்தாத் கல்தேய வழிபாட்டு முறையின் புதிய முதுபெரும் தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேதகு மூன்றாம் போலிஸ் நோனா அவர்களுக்குத் திருஅவையின் உறவு ஒன்றிப்பை வழங்கியுள்ளார். திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், பாக்தாத் கல்தேய வழிபாட்டு முறையின் முதுபெரும் தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேதகு மூன்றாம் போலிஸ் நோனா அவர்களுக்கு திருஅவையின் உறவு ஒன்றிப்பை (Ecclesiastical Communion) வழங்கினார். கீழைத் திருஅவைச் சட்ட விதிகளின்படி (CCEO Can. 76 §2), பாக்தாத் கல்தேயவழிபாட்டு முறையின் புதிய முதுபெரும்தந்தையாக இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஏப்ரல் 12 அன்று உரோமில் நடைபெற்ற கல்தேய ஆயர் பேரவைக் கூட்டத்தில் இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியானது.தமது கடிதத்தின் வழியாக இந்த உறவு ஒன்றிப்பை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்துள்ள திருத்தந்தை, "இந்நிகழ்வு திருப்பீடத்துடனான முழுமையான பிணைப்பை உறுதிசெய்வதுடன், திருஅவையின் ஒருமைப்பாட்டையும் பொதுவான நற்செய்திப் பணியையும் மேலும் வலுப்படுத்துகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். புதிய முதுபெரும் தந்தையின் பணிவாழ்விற்கு தூய ஆவியாரின் துணையை வேண்டிய திருத்தந்தை, கல்தேய திருஅவையானது பண்டைய திருத்தூது பாரம்பரியத்தையும், பல மறைசாட்சிகளின் சான்று வாழ்வினால் பெறப்பட்ட அடையாளத்தையும் கொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.மேலும் தனது தாயகத்திலும் உலகெங்கும் பரவி வாழும் மக்களிடையேயும் நற்செய்தியை

அறிவிப்பதில் தொடர்ந்து தீவிர ஆர்வத்துடன் செயல்பட வேண்டும் என்றும் மேதகு மூன்றாம் போலிஸ் நோனா அவர்களை திருத்தந்தை ஊக்கப்படுத்தியுள்ளார்.புதிய முதுபெரும்தந்தையை அன்னை கன்னி மரியாவின் பரிந்துரையில் ஒப்படைத்த திருத்தந்தை, இந்நிகழ்வு ஆண்டவருக்குள் ஒரு பெரும் ஆறுதலாகவும் ஊக்கத்தின் அடையாளமாகவும் அமையட்டும் என வாழ்த்தி, தனது திருத்தூது ஆசிரை (Apostolic Blessing) வழங்கி கடிதத்தை நிறைவு செய்தார்.

## ஆப்பிரிக்க திருத்தூதுப் பயண நிறைவில் செய்தியாளர்களுடன் திருத்தந்தை சந்திப்பு

புலம்பெயர்தல் என்பது ஒரு தனிப்பட்ட பிரச்சனையல்ல, அது ஒரு உலகளாவிய சவால் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, வறுமையின் பிடியில் இருக்கும் நாடுகளுக்குத் தகுந்த ஆதரவையும் வாழ்வாதாரத்தையும் வழங்கச் செல்வந்த நாடுகள் என்ன செய்துகொண்டிருக்கின்றன? என்ற கேள்வியையும் எழுப்பினார். தனது முதன்மையான பணி மேய்ப்புப்பணி என்றும், அரசியல் முடிவுகளில் கவனம் செலுத்துவதை விட நற்செய்தியை அறிவிப்பதும், மக்களின் மகிழ்ச்சி மற்றும் துன்பங்களில் அவர்களுக்குத் துணையாக இருப்பதுமே தனது நோக்கம் என்று திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் குறிப்பிட்டுள்ளார். போர் குறித்துத் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய திருத்தந்தை, ஒரு மேய்ப்பராக என்னால் ஒருபோதும் போரை ஆதரிக்க முடியாது என்றும், குறிப்பாக ஈரான் மற்றும் லெபனோன் ஆகிய நாடுகளில் நிலவும் மோதல்களால் அப்பாவி மக்களும், பிஞ்சுக் குழந்தைகளும் அனுபவித்து வரும் துயரங்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையையும் வெளிப்படுத்தினார்.

## துபாயில் கிறிஸ்தவ சபைகள் ஒன்றிணைந்து நடத்திய அமைதி வழிபாடு

துபாயில் உள்ள புனித மரியன்னை கத்தோலிக்க ஆலயத்தில், தெற்கு அரேபியாவின் திருத்தூதுப் பிரதிநிதி ஆயர் பாலோ மார்டினெல்லி தலைமையில் தேசிய அளவிலான கிறிஸ்தவ ஒன்றிப்பு இறைவேண்டல் நடைபெற்றது. அதில் அவர், தெற்கு அரேபியாவின் திருத்தூது நிர்வாகமும் புனித மரியன்னை ஆலயமும் முன்னெடுத்த இந்த முயற்சியை வளைகுடா திருஅவைகளின் கூட்டமைப்பு ஒருங்கிணைத்திருந்தது. திருஅவைப் பணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசு அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்த ஆயர் மார்டினெல்லி அவர்கள், ஐக்கிய அரபு அமீரகம், வளைகுடா மற்றும் உலக நாடுகள் அனைத்திலும் அமைதி நிலவ அனைவரும் ஒன்றிணைந்து செபிக்க அழைப்பு விடுத்தார். துபாயில் கிறிஸ்தவ ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டதைக் குறிக்கும் வகையிலும், உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையிலும் அமைந்த இந்த இறைவேண்டல் நிகழ்வு மூன்று பகுதிகளாக நடைபெற்றது. முதலில் நீசேயா நம்பிக்கை அறிக்கையை அறிவித்து, பின் புனித நூல்களை வாசித்து மெழுகுதிரி ஏந்தி அமைதிக்காக மன்றாடி, ஒருவருக்கொருவர் அமைதியைப் பகிர்ந்து கொண்டனர்.

## இறை அழைத்தலுக்கான உலக செப நாளை கொண்டாடிய சீன கத்தோலிக்க சமூகங்கள்

இறை அழைத்தலுக்கான உலக செப நாளையொட்டி, "என்னைப் பின்பற்றி வாருங்கள்" என்ற கிறிஸ்துவின் அழைப்பிற்கு மற்றவர்கள் செவிசாய்க்க உதவுமாறு ஷிஜியாசுவாங் பெய்ஜிங் மறைமாவட்டக் குருத்துவக் கல்லூரி அழைப்பு விடுத்துள்ளது. இறை அழைத்தலை வளர்த்தெடுப்பதில் அனைத்துக் கிறிஸ்தவர்களும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.சீனா முழுவதும் குருத்துவ மற்றும் துறவற அழைப்புகளை ஊக்குவிக்க, பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. குருத்துவக் கல்லூரி மாணவர்களும் பயிற்சியாளர்களும் பல்வேறு பங்குத்தளங்ளைச் சந்தித்து, இறை அழைத்தல்களை வளர்ப்பதில் குடும்பங்களின் பங்கை வலியுறுத்தியதோடு, திருஅவை பணிகளுக்கு ஆதரவு நல்குமாறு விசுவாசிகளைக் கேட்டுக்கொண்டனர்.

## வன்முறையற்ற அரசியல் சூழலை வலியுறுத்தும் கென்ய ஆயர்கள்

மதிப்புமிக்க மனித வாழ்க்கை, அறநெறி சார்ந்த தலைமைத்துவம் மற்றும் சமூக நீதியின் அடிப்படையில் நாட்டைப் புதுப்பிக்க வேண்டும் என்ற தனது கருத்தை வலியுறுத்தி கென்ய கத்தோலிக்க ஆயர் பேரவை ஒரு விரிவான செய்தியறிக்கையை வெளியிட்டுள்ளது. உயிர்ப்புப் பெருவிழா மற்றும் அமைதிக்கான திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் அழைப்பு ஆகியவற்றால் ஊக்கம் பெற்ற கென்ய ஆயர்கள், கென்யா போன்ற நாடுகளை பாதிக்கும் உலகளாவிய மோதல்களுக்கு அமைதி பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண வலியுறுத்தியுள்ளனர். அவமதிப்புகள், சகிப்புத்தன்மையின்மை மற்றும் அரசியலால் தூண்டப்பட்ட வன்முறைகளால் பொது விவாதங்கள் வலுவிழந்து வரும் போக்கை விமர்சித்துள்ள ஆயர்கள், அமைதியற்ற சூழலில் இளைஞர்கள் பயன்படுத்தப்படுவதைக் கண்டித்து பொறுப்பான தலைமைத்துவத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

## போரின் காயங்களுக்கு நடுவே நம்பிக்கையின் ஒளி

உக்ரைனில் துயரத்தில் இருந்த மக்களுக்கு திருஅவை உறுதுணையாக இருந்தது என்றும், தங்களால் இயன்ற உதவிகளை மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியதாகவும் கூறிய உக்ரைனின் கிவ்-ஸைடோமிர் இலத்தீன் மறைமாவட்டத்தின் சலேசிய ஆயர் வித்தாலி கிரிவிட்ஸ்கி அவர்கள், பங்குத் தளங்கள் மின்சார அமைப்புகளுடன் தயார் செய்யப்பட்டு பொது மக்களுக்காகத் திறந்து விடப்பட்டு அங்கு மக்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் அடிப்படை நலவாழ்வு சேவைகள் வழங்கப்பட்டன என்றும் எடுத்துக்காட்டினார். உலகளாவிய கத்தோலிக்க சமூகம் வெளிப்படுத்திய வலுவான ஒன்றிப்பை வலியுறுத்திய ஆயர் கிரிவிட்ஸ்கி அவர்கள், குறிப்பாக போலந்து நாட்டு மறைமாவட்டங்களின் ஆதரவு மூலமாகவும் இந்த ஒன்றிப்பு வெளிப்பட்டதாக குறிப்பிட்டார்.

# சுடர் வாசகர் போட்டி 133

## சரியான விடைகள்

1. பெரிய வியாழன், புனித வெள்ளி, திருவிழிப்பு- உயிர்ப்பு
2. குருத்துடன் பவனி, பாதம் கழுவுதல், நற்கருணை இடமாற்றம், திருச்சிலுவை ஆராதனை மற்றும் உயிர்ப்பின் ஒளி வழிபாடு
3. இயேசுவின் உயிர்ப்பு
4. புனித ஸ்தனிஸ்லாஸ்
5. பாஸ்கா காலத்தின் 2ம் ஞாயிறு
6. உயிர்த்த இயேசுவை
7. புனித அன்சல்ம் ஆயர்
8. புனித ஜார்ஜ் திருத்தலம்
9. சிக்மரிங்கன் நகர்ப் பிதேலிஸ்
10. புனித லூயிஸ்
11. புனித லூயிஸ் மரிய கிரிஞ்ஞோன்
12. சியென்னா நகர்ப் புனித கத்ரீன்
13. இயேசு
14. உயிர்ப்பின் மக்கள்
15. பத்தாம் ஆண்டு



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr. A. Antony Stephen, Bangalore
Ms. Jenifer, Chennai
Mr. Francis Paulraj, Dharmapuri

# சுடர்

## வாசகர் போட்டி 134

1. திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் "திருஅவையின் பாதுகாவலர்" என யாரை பிரகடணப்படுத்தினார்?
2. நான்கு பேரரசர்களால் பலமுறை நாடுகடத்தப்பட்ட புனிதர்?
3. எவரும் அழியாமல் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ளும் வழி?
4. நற்கருணை அருட்சாதனத்தைப் பற்றிய அனைத்து மறை உண்மைகளையும் கற்றுத் தெளிவுற்றிருந்த புனிதர்?
5. நம்மை இறையரசுடன் இணைப்பாளர்களாக மாற்றுவது எது?
6. சகாய அன்னையின் புதல்வியர் சபையின் துணை நிறுவனர் யார்?
7. "புனிதத்தை அடைய இன்றே உன் வாழ்வில் இறுதிநாள் என எண்ணி செயலாற்று" என்றவர் யார்?
8. எப்போது நாம் கடவுளது வல்லமைப்பெற்று உலகின் கடையெல்லை வரைக்கும் அவருக்கு சாட்சியாய் இருக்க முடியும்?
9. "அமைதியில் செயல்படு" (Silent Action), என்ற விருதுவாக்கை ஏற்றவர்?
10. ரவென்னா நகரில் சிறைவாசத்தின்போதே மறைசாட்சியாக உயிர் துறந்த புனிதர் யார்?
11. "உரோமை நகரின் இரண்டாம் அப்போஸ்தலர்" என அழைக்கப்படுபவர்?
12. "எனக்காகவும் என்னைத் துன்புறுத்துவோருக்காகவும் செபியுங்கள்" என்று உரத்த குரலில் கூறிய புனிதர் யார்?
13. "அன்பினால் அவர்களை வெல்ல வேண்டும்" யார் யாருடைய கனவில் தோன்றி சொன்னது?
14. சமீபத்தில் திருப்பீடத்துடன் இணைந்த திருஅவை எது?
15. வறுமையின் பிடியில் இருக்கும் நாடுகளுக்குத் தகுந்த வாழ்வாதாரத்தை வழங்கச் செல்வந்த நாடுகளை எச்சரித்தவர் யார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிகாட்டி

புனித போனிப்பாஸ்

கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடல், திருஇரத்தம் பெருவிழா

புனித மரியம் தெரசியா

புனித பர்னபா

இயேசுவின் தூய்மைமிகு இதயம் பெருவிழா

அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள்

புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம்

பொதுக் காலத்தின் 11ம் ஞாயிறு

புனித ரோமுவால்டு துறவு மடத்துத் தலைவர்

பொதுக் காலத்தின் 12ம் ஞாயிறு

புனித ஜோசப் காபசோ

புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா

அலெக்சாந்திரியா நகர்ப் புனித சிரில்

புனிதர்கள் பேதுரு, பவுல், திருத்தூதர்கள் பெருவிழா

உரோமைத் திருஅவையின் முதல் மறைசாட்சியர்

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள் பற்றிய வரலாறு

புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம் தரும் செய்தி

இயேசுவின் தூய்மைமிகு இதயம் பற்றிய சிறப்பு நிகழ்வுகள்

திருஅவையின் செய்திகள்

# மே மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | வெ | தொழிலாளர் புனித யோசேப்பு விழா | தி.ப 13:26-23 | யோவா 14:1-6 |
| 02 | ச | புனித அத்தனாசியார் | தி.ப 13:44-52 | யோவா 14:7-14 |
| **03** | ஞா | பாஸ்கா காலத்தின் 5ம் ஞாயிறு | I. தி.ப 6:1-7<br>II. 1 பேது 2:4-9 | **யோவா. 14: 1-12** |
| 04 | தி | | தி.ப 14:5-18 | யோவா 14:21-26 |
| 05 | செ | | தி.ப 14:19-28 | யோவா 14:27-31 |
| 06 | பு | புனித தோமினிக் சாவியோ விழா | தி.ப 15:1-6 | யோவா 15:1-8 |
| 07 | வி | | திப. 15: 7-21 | யோவா 15:9-11 |
| 08 | வெ | | திப. 15: 22-31 | யோவா 15:12-17 |
| 09 | ச | | திப. 16: 1-10 | யோவா 15:18-21 |
| **10** | ஞா | பாஸ்கா காலத்தின் 6ம் ஞாயிறு | I. தி.ப 8:5-8, 14-17<br>II. 1 பேது 3:15-18 | **யோவா. 14: 15-21** |
| 11 | தி | | திப. 16: 11-15 | யோவா 15:26, 16:4 |
| 12 | செ | | திப. 16: 22-34 | யோவா 16:5-11 |
| 13 | பு | புனித மரிய மசரெல்லோ | திப. 17:15, 22, 18:1 | யோவா. 16:12-15 |
| 14 | வி | புனித மத்தியா திருத்தூதர் விழா | திப. 1: 15-17,20-26 | யோவா. 15:9-17 |
| 15 | வெ | | திப. 18:9-18 | யோவா. 16:20-23 |
| 16 | ச | | திப. 18:23-28 | யோவா. 16: 23-28 |
| **17** | ஞா | ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா | I. தி.ப 1::1-11<br>II. எபே 1:17-23 | **மத்.28:16-20** |
| 18 | தி | புனித முதலாம் யோவான் | திப. 19: 1-8 | யோவா. 16:29-33 |
| 19 | செ | | திப. 20: 17-27 | யோவா. 17:1-11 |
| 20 | பு | | திப. 20:28-38 | யோவா. 17:11-19 |
| 21 | வி | | திப. 22: 30,23:6-11 | யோவா. 17:20-26 |
| 22 | வெ | | திப. 25:13-21 | யோவா. 21:15-19 |
| 23 | ச | | திப. 28: 16-20,30-31 | யோவா. 21:20-25 |
| **24** | ஞா | பெந்தக்கோஸ்து பெருவிழா | I. திப. 2: 1-11<br>II. 1கொரி 12:3-7,12-13 | **யோவா. 20: 19-23** |
| 25 | தி | திருஅவையின் தாய் அன்னை மரியா | திப. 1:12-14 | யோவா. 19:25-34 |
| 26 | செ | புனித பிலிப்பு நேரி | 1 பேது 1:10-16 | மாற்கு 10:28-31 |
| 27 | பு | | 1 பேது 1:18-25 | மாற்கு 10:32-45 |
| 28 | வி | | 1 பேது 2:2-5,9-12 | மாற்கு 10:46-52 |
| 29 | வெ | அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி | 1 பேது 4:7-13 | மாற்கு 11:11-25 |
| 30 | ச | | யூதா 17:20-25 | மாற்கு 11:27-33 |
| **31** | ஞா | தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா | I. விப. 34:4-6, 8-9<br>II. 2கொரி 113:11-13 | **யோவா 3:16-18** |

TO SHARE
THE LIGHT

# தீபகம் மறைப்பணி மையம் வழங்கும்

## அருளடையாளங்களின் மறைக்கல்வி (தமிழ் & English)

**AVAILABLE NOW**




தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

## தீபகம்

45 லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-10

தொலைப்பேசி : 044 26428162, 9940276203




*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)

*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT

*தயாரிப்பில் மேற்பார்வை* : **ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**